இலங்கையின் முதல் தமிழ்க் கத்தோலிக்க வார ஏடு

# பாதுகாவலன்
PAATHUKAVALAN

Registered in the Department of Post of Sri Lanka No. QD/119/News/2024. Founded 19 Feb.1876
St.Joseph's Catholic Press, 360 Main Street, Jaffna, Sri Lanka. Tel: 021 - 222 2378 | Fax: 021 - 222 9041 | E-mail: editorkavalan@gmail.com, ISSN 1391-7633

மலர் : 148 | இதழ் : 07 | திகதி : 02.06.2024 | விலை : 50.00

# அருட்பணியாளர்கள் நன்மை செய்வதில் சோர்வடையாது இயேசுவின் அன்பில் நிலைத்திருந்து பணி செய்யவேண்டும்

**- திருத்தந்தை**




அர்ப்பண வாழ்வுக்கு அழைக்கப்பட்ட ஒவ்வொருவரின் வாழ்விலும் நல்ல பலனைத் தரும் வகையில், ஒவ்வொரு நாளும் இறையழைத்தல் என்ற கொடை பாதுகாக்கப்பட வேண்டும் மற்றும் வளர்க்கப்பட வேண்டும் என்று கூறியுள்ளார் திருத்தந்தை பிரான்சிஸ். அர்ப்பண வாழ்வுக்கான மகத்தான இந்த இறையழைத்தலுக்காக நான் நன்றியுள்ளவனாக இருக்கிறேன் என்று பெருமிதத்துடன் கூறியுள்ள திருத்தந்தை, இது அதன் பல்வேறு தனி-வரங்களில், திருஅவையின் ஒன்றிப்பை வளப்படுத்துகிறது மற்றும் உலகம் முழுவதும் திருஅவையின் பணிக்குப் பெரிதும் பங்களிக்கிறது என்று எடுத்துக்காட்டியுள்ளார். இம்மண்ணுலகின் பல்வேறு இடங்களில் நிகழ்ந்த நற்செய்தியின் முதல் அறிவிப்பு, அர்ப்பண வாழ்வுக்கு அழைக்கப்பட்ட இருபால் துறவியரின் முகத்தைக் கொண்டுள்ளது என்று சுட்டிக்காட்டியுள்ள திருத்தந்தை, அவர்கள் மிகுந்த அர்ப்பணிப்புடனும், ஆழ்ந்த ஈடுபாட்டுடனும், "உலகெங்கும் சென்று படைப்பிற்கெல்லாம் நற்செய்தியைப் பறைசாற்றுங்கள்" (காண்க. மாற் 16:15) என்ற இயேசுவின் விருப்பக்கட்டளையை ஏற்று செயல்படுத்துகின்றனர் என்றும் விளக்கியுள்ளார்.

அர்ப்பண வாழ்வு, இயேசுவின் அன்பில் நிலைத்திருந்தால் அழகு காணும் என்று உரை-த்துள்ள திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், ஏழ்மை, கற்பு, மற்றும் கீழ்ப்படிதல் வார்த்தைப்பாடுகள் குறித்து சில ஆண்டுகளுக்கு முன்பு சிறப்பிக்கப்பட்ட அர்ப்பண வாழ்வு ஆண்டில் வழங்கிய தனது சிந்தனைகளையும் நினைவூட்டியுள்ளார்.



அருட்பணியாளர்களே, நன்மை செய்வதில் எப்போதும் சோர்வடைய வேண்டாம் என்று கூறினார் திருத்-தந்தை பிரான்சிஸ்.

(தொடர்ச்சி 2 ம் பக்)

## யாழ். புனித மரியன்னை பேராலயத்தில் பொதுநிலையினர் மாநாடு





யாழ். மறைமாவட்ட பொதுநிலையினர் ஆணைக்குழுவினால் முன்னெடுக்கப்பட்ட 'பொதுநிலையினர் மாநாடு' கடந்த 24ஆம் திகதி வெள்ளிக்கிழமை நடைபெற்றது. ஆணைக்குழு இயக்குநர் அருட்தந்தை மவுலிஸ் அவர்களின் ஒழுங்குபடுத்தலில் இடம் பெற்ற இந்நிகழ்வில் அமலமரித் தியாகிகள் சபை யாழ். மாகாண முதல்வர் அருட் தந்தை ஜெயந்தன் பச்சேக் அவர்களின் தலைமையில் புனித மரியன்னை பேராலயத்தில் திருப்பலியும் தொடர்ந்து யாழ். புனித மரியன்னை பேராலய ஆயர் யஸ்ரின் மண்டபத் தில் மாநாட்டு நிகழ்வுகளும் நடைபெற்றன. இந்நிகழ்வில் கடந்த ஆண்டிற்கான அறிக்கை கள் சமர்ப்பிக்கப்பட்டதுடன் அமலமரித்தியாகிகள் சபை அருட்தந்தை ஜெகன்குமார் அவர் களால் இறைவேண்டல் ஆண்டை மையப்படுத்திய சிறப்புரையும் பொதுநிலையினருக்கான கௌரவிப்பும் இடம்பெற்றன. இந்நிகழ்வில் அருட்தந்தையர்கள், பொதுநிலையினர்க ளெனப்பலரும் கலந்துகொண்டனர்.

### சாவகச்சேரிப் பங்கில்
## மறைக்கல்வி மாணவர்களுக்கான பாசறையும் மறையாசிரியர்களுக்கான கருத்தமர்வும்



யாழ். மறைமாவட்ட மறைக்கல்வி நிலையத்தின் ஏற்பாட்டில் சாவகச்சேரிப் பங்கில் முன்னெடுக்கப்பட்ட மறைக்கல்வி-மாண வர்களுக்கான பாசறையும் மறை யாசிரி யர்களுக்கான கருத்தமர்வும் கடந்த 18ஆம் திகதி சனிக்கிழமை சாவகச்சேரி புனித லிகோரியார் ஆலயத்தில் நடை-பெற்றது. சாவகச்சேரிப் பங்குத்தந்தை அருட்தந்தை ஞானறூபன் அவர்களின் ஒழுங்கு படுத்தலில் மறைக்கல்வி நிலைய இயக்குநர் அருட்தந்தை ஜேம்ஸ் அவர்களின் வழிநடத்-தலில் நடைபெற்ற இந்நிகழ்வில் கருத்துரைகள், குழுச்செயற்பாடுகள், விளையாட்டுக்கள் என்பன இடம்பெற்றன. இந்நிகழ்வில் 110 வரையான மாணவர்களும் 24 வரையான ஆசிரியர்களும் பங்குபற்றிப் பயனடைந்தனர்.

## அகவொளியில் பட்டமளிப்பு விழா




யாழ். மறைமாவட்ட அகவொளி குடும்ப நல மையத்தி னால் முன்னெடுக்கப்பட்டுவந்த உள ஆற்றுப்படுத்தல் டிப்ளோமாக் கற்கைநெறியை நிறைவுசெய்த 9ஆவது அணி மாணவர்களுக்கான பட்டமளிப்பு விழா கடந்த 24ஆம் திகதி வெள்ளிக்கிழமை நிலைய மண்டபத்தில் நடைபெற்றது.

அகவொளி இயக்குநர் அருட்தந்தை டேவிட் அவர்களின் ஒழுங்குபடுத்தலில் இடம்பெற்ற இந்நிகழ்வில்கற்கை நெறியை பூர்த்தி செய்த 23 மாணவர்கள் டிப்ளோமா சான்றிதழ் பெற்றுக்கொண்டார்கள்.

யாழ். மறைமாவட்ட ஆயர் பேரருட்-தந்தை யஸ்ரின் ஞானப்பிரகாசம் அவர்கள் பிரதம விருந்தினராகவும் நிறுவன முந் நாள் இயக்குநர் அருட்தந்தை இராஜேந்-திரம் ஸ்ரலின் அவர்கள் சிறப்பு விருந்தி-னராகவும் யாழ். பிரதேச செயலக ஆற்றல் மேம்பாட்டு உத்தியோகத்தர் திரு. நீலாம் பரன் அவர்கள் கௌரவ விருந்தினராகவும் கலந்து இந்நிகழ்வை சிறப்பித்தனர்.

## திருத்தொண்டர்களுக்கான திருநிலைப்படுத்தல் திருச்சடங்கு



அமலமரித்தியாகிகள் சபை நிறுவுனர் புனித இயூயின் டி மசெனட் திரு விழாவும் திருத்தொண்டர்களுக்கான திருநிலைப்படுத்தல் திருச்சடங்கும் கடந்த 21ஆம் திகதி செவ்வாய்க்கிழமை கொழும்புத்துறை டி மசெனற் சிற்றாலயத்தில் நடைபெற்றது.

யாழ். மறைமாவட்ட ஆயர் பேரருட்தந்தை யஸ்ரின் ஞானப்பிரகாசம் அவர் கள் தலைமையில் நடைபெற்ற திருப்பலியில் அருட்சகோதரர்களான டிலுசன் பியூமால் மற்றும் கிளெலடி மரீனோ ஆகியோர் திருத்தொண்டர்களாக திரு நிலைப்படுத்தப்பட்டனர்.

**ஆண்டவர் நகரைக் காக்கவில்லையெனில், காவலர்கள் விழித்திருப்பதும் வீணாகும். (தி.பா : 127:1)**

# எமது எண்ணம்

## பொது வேட்பாளரின் முக்கியத்துவம்

இலங்கைத் தீவில் ஈழத்தமிழர் தேசத்தின் தன்னாட்சியுரிமையுடனான இறைமைக் கோட்பாட்டைச் சிதைத்து உள்ளக விவகாரமாக மாற்றிவிட வேண்டும் என்ற நோக்கம் கொண்டவர்கள் ஒரு புறமும் தென்னிலங்கையின் பிரதான வேட்பாளர்களுடன் இரகசிய ஒப்பந்தங்களை ஒளித்து மேற்கொள்வதில் கைதேர்ந்த தமிழர்களின் தேசிய ஏமாற்றுக் கட்சிகள் மறுபுறமுமாக இலங்கை ஒற்றையாட்சி அரசின் ஜனாதிபதித் தெரிவில் ஈழத்தமிழர்களின் பொதுவேட்பாளர் முன்வைக்க வேண்டிய கருத்தியலைக் குட்டிச் சுவராக்கும் சிதைப்பு நடவடிக்கைகளைத் திரைமறைவில் கட்ட விழ்த்து விட்டுள்ளது.

இந்தச் சிதைப்பைத் தாண்டிய நிலையில் பொது வேட்பாளர் எனும் கருத்தியல் வெற்றிபெற வேண்டுமானால் நடக்கவேண்டியது என்ன என்ற கேள்விக்குத் துரிதமாகத் தெளிவான தெளிவுபடுத்தல் அவசியமாகிறது.

யார் யார் என்ன சொல்கிறார்கள், ஏன் அவர்கள் இவ்வாறெல்லாம் சொல்கிறார்கள், அவர்களின் பின்னணியில் சதியாலோசனை இருக்கிறதா என்பதை சமூக வலைப் பாணியில் ஆராய்ந்து குட்டையைக் கிளப்புவது கருத்தாக்க வெளிக்கு உகந்ததல்ல. கருத்துகளை கருத்துகளால் எதிர்கொள்வதே ஆக்கபூர்வமானது.

பொதுவேட்பாளர் எனும் கருத்தியல் எவ்வளவு முக்கியமானதோ அவ்வளவுக்கு பொதுவேட்பாளராக முன்வைக்கப்ப விருக்கும் மனிதரும் முக்கியமானவர்.

ஏன் என்றால் கருத்தியல் திசை திருப்பப்படு வதைப் போல அக் கருத்தியலை ஆணையாகத் தாங்கும் மனிதரும் திசை திருப்பப்பட்டால் கருத்தியலின் ஆணையே தனது அடிநாதத்தை இழந்துவிடும்.

ஈழத்தமிழர் அரசியல் வரலாற்றில் இவ்வாறாக மக்கள் ஆணையைத் திசை திருப்பிய வரலாறு ஜி. ஜி. பொன்னம்பலம் போன்ற தலைவர்களில் இருந்து அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கம் வரை மட்டுமல்ல 2009 ஆம் ஆண்டுக்குப் பின்னர் ஈழத்தமிழர் தேசியம் பேசும் அரசியல் கட்சிகளில் மக்களாணை பெற்ற தலைவராகத் தன்னை வெளிப்படுத்தி பின்னர் சிங்கக்கொடி விசுக்கிய முது பெரும் இரா. சம்பந்தன் உள்ளிட்டவர்கள் ஈறாகத் தொடர்கிறது.

தேர்தல் வேட்பாளராக ஒரு தடியை நட்டு, தடி முக்கியமல்ல அதன் பின்னால் இருக்கும் கருத்தியல் தான் முக்கியம், ஆகவே தடிக்கே உங்கள் வாக்கு என்ற கருத்தியலை மக்களின் நேசிப்புடன் இயங்கும் நேர்மையான ஒரு போராட்டத் தலைமை முன்வைத்தால், அதற்குக் கட்டுப்படும் போக்கு ஒரு காலத்தில் இருந்தது. இன்று அது இல்லை.

இன்றைய, ஆக்கிரமிக்கப்பட்ட ஈழத்தமிழர் தேசத்துக்கு அவ்வாறான அன்புக்கட்டளை பிறப்பிக்கும் நம்பகத்தன்மையை எந்த சிவில் சமூக அமைப்பும் இலகுவாகப் பெற்றுவிட இயலாது.

ஆதலால், கருத்தியலும் உறுதியாக இருக்க வேண்டும், அதைத் தாங்கி வெளிப்படும் வேட்பாளரும் உறுதியானவராக இருக்கவேண்டும். இவை இரண்டும் பின்னிப்பிணைந்து வெளிப்படுவதே பொதுவேட்பாளர் என்ற கோட்பாடு.

இந்தக் கோட்பாட்டைப் பின்னால் எப்படி நகர்த்திச் செல்லலாம் என்ற அதீத கற்பனைகளில் ஈடுபட்டு வெறுந் தடிகளைத் தேட முற்பட்டால், தடியே தன்னைத் தாக்கும் நிலையே உருவாகும். ஆகவே, வெறுந்தடி வேட்பாளராகலாம் என்ற கதையை விட்டு விட்டு உருப்படியான வேட்பாளரின் முக்கியத்துவத்தை உணர்ந்து கொள்ளவேண்டும்.

ஒற்றையாட்சி அரசியல் யாப்பின் வேரூன்றிய (Entrenched Clauses) தன்மைகள் ஈழத்தமிழர் தேசத்தால் ஒருபோதும் ஒப்புக்கொள்ள இயலாதவை. இந்த வேரூன்றிய தன்மைகள் பல உறுப்புரைகளில் வெளிப்படுகின்றன, இவற்றோடு ஆறாம் சட்டத்திருத்தம் போன்ற அரசியலமைப்புத் திருத்தங்களிலும் இவை வெளிப்படுகின்றன.

இவ்வாறான உறுப்புரைகளையும் திருத்தங்களையும் ஒருசேர மறுதலிக்கும் ஈழத்தமிழர் ஆணையாக பொதுவேட்பாளரின் கொள்கைப் பிரகடனம் அமைய வேண்டும். அது உலக சமூகத்தை நோக்கிய பொறுப்புகள் சார்ந்த கோரிக்கையாக வெளிப் படவேண்டும்.

அருட்பணி.எஸ்.எமின்சிலி றொஷான்

# இரத்தினபுரி மறைமாவட்டத்திற்கு புதிய ஆயர்



இரத்தினபுரி மறைமாவட்டத்தின் நான்காவது ஆயராக அதிவண. அன்ரன் வயமன் குரூஸ் ஆண்டகை அவர்கள் கடந்த யூன் மாதம் 01ம் திகதி மேதகு கிளின்ரஸ் சந்திரஸ்ரீ பெரேரா ஆண்டகை அவர்களால் திருநிலைப் படுத்தப்பட்டார்.

புதிய ஆயர் அவர்கள் புத்தளம், சிலாபம் பகுதிகளில் மறைக் கோட்ட முதல்வராகவும், பல பங்குகளிலும், குருத்துவக் கல்லூரியிலும் பணியாற்றியுள்ளார்.

இவர் சிங்களம், தமிழ், ஆங்கிலம், இத்தாலி போன்ற மொழிகளில் தேர்ச்சி பெற்றவராவார். புதிய ஆயருக்கு எமது செபங்களையும் வாழ்த்துக்களையும் தெரிவித்து நிற்கின்றோம்.

# கல்வி நிலையங்களோடு முடிவடைந்து விடுவதில்லை கற்றல்

நம் சமூகத்தின் தற்கால மற்றும் வருங்கால நம்பிக்கைகளாக இருக்கும் மாணவர்களில் தானும் அதிக ஆர்வம் கொண்டுள்ளதாகத் திருத்தந்தை தெரிவித்துள்ளார்.

பெற்றோரே குழந்தைகளுக்குக் கல்வி கற்பிக்கும் முதல் ஆசிரியர்கள் என்பதை தன் செய்தியில் வலியுறுத்தியுள்ள திருத்தந்தை, இது சமூகத்துடனான ஒத்துழைப்புடன், கல்வி நிலையங்களிலிருந்து தொடங்கப்பட வேண்டும் என்பதையும் சுட்டிக்காட்டியுள்ளார்.

கல்வி நிலையங்கள் மற்றும் பெற்றோருடன் இணைந்த ஒரு பணி என்பது அறிவையும் ஆன்மீகத்தையும் இளைய தலைமுறைக்கு கடத்திச் செல்ல உதவும் எனத் திருத்தந்தையின் செய்தி கூறுகிறது.

இத்தகைய ஒன்றிணைந்த பணி, ஆன்மீகக் கூற்றை உறுதி செய்வதுடன், மனிதாபிமானம் நிறைந்த உலகைக் கட்டியெழுப்ப உதவும் கல்வியை ஊக்குவிப்பதாக இருக்கும் என மேலும் கூறியுள்ளார் திருத்தந்தை.

கல்விப் பணியின் பல்வேறு துறைகளில் ஈடுபட்டிருப்போர் ஒவ்வொருவருக்கும், பெற்றோருக்கும், மாணவர்களின் வாழ்வு முன்னேற்றத்தில் அவரவருக்குரிய பங்கு உள்ளது என்பதையும் திருத்தந்தை யின் செய்தி சுட்டிக்காட்டியுள்ளது.


குழந்தைகளின் கல்விப் பணியில் பெற்றோர் காட்டிவரும் ஆர்வத்தைப் பாராட்டிய திருத்தந்தை, கல்வி என்பது கல்வி நிலையங்களோடு முடிவடைந்து விடுவதில்லை, மாறாக, வாழ்வு முழுவதும் அதன் விளைவுகள் உணரப்படுகின்றன என்பதையும் எடுத்துரைத்தார்.

ஒழுக்க நீதிக்கோட்பாடுகள் மற்றும் செயற்கை நுண்ணறிவு குறித்தும் எடுத்துரைத்து, கவனமுடன் செயற்படவேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்தினார் திருத்தந்தை பிரான்சிஸ்.

## அருட்பணியாளர்களே!...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

திருத்தந்தை உரோமையின் பல்வேறு பகுதிகளுக்குச் சென்று பங்குத்தள அருட்பணியாளர்கள் மற்றும் தல நிர்வாகத் தலைவர்களைச் சந்தித்து அவர்கள் பணியில் சந்திக்கும் சவால்கள், சிரமங்கள், சாதனைகள் மற்றும் மனநிறைவுகளைக் கேட்டறிந்தார். வத்திக்கானின் புனித பேதுரு பெருங்கோவிலிலுக்கு மிக அருகிலுள்ள புனித வளனார் பங்குத் தளத்திற்குச் சென்ற திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், 40 ஆண்டுகளுக்கு முன்பு குருக்களாகத் திருநிலைப்படுத்தப்பட்ட 70 பேரைச் சந்தித்தார் என்பது குறிப்பிடத்தக்கது.



# இயேசுவின் திரு இருதய வழிபாடு

**"இயேசுவின் திருஇருதயப் பக்தி இயேசுவின் அன்புக்கு அடையாளமாக இருக்கிறது"**

கடவுள் அன்பாக இருக்கிறார் என்று ஏற்றுக்கொள்கிறோம். ஆனால் அவர் அன்பராகவும் இருக்கிறார் என்று ஏற்றுக் கொள்ள வேண்டும். கட வுள் அன்பாக இருக்கிறார் என்று ஏன் ஏற்றுக் கொள்கிறோம்? கடவுளுடைய தன்மையை ஆராய்ச்சி செய்து பார்க்கும்போது அவர் அன்பாகத்தான் இருக்க வேண்டுமென்று தெரிகிறது. ஆனால் அவர் அன்பராக இருக்கிறார் என்று ஏன் ஏற்றுக்கொள்கிறோம்? இதற்கு ஆராய்ச்சி செய்து பார்த்தால் மட்டும் போதாது. ஓர் நபரைப் பார்க்கவேண்டும். அந்த நபர்தான் இயேசுக்கிறிஸ்து. ஏனெனில் இயேசுக்கிறிஸ்துவிலே தான் கடவுளின் அன்பு வெளிப்பட்டது.

இறைமகன் மனிதருள் ஒருவராய் நம் தசையோடு தசையாய், இரத்தத்தோடு இரத்தமாய், ஊனோடு ஊனாய், உயிரோடு உயிராய், மனிதருள் ஒரு பிறவியாய் உருவெடுத்தார். இறைவன் அன்பைத் தன் இதயத்திலே நிரப்பி இவ்வுலக மக்களுக்கு வாரி வழங்குகிறார். இயேவின் திருவிருதய பக்திக்கு இங்குதான் உள்ளது. அடிப்படை,

திருச்சபையில் எத்தனை பக்திகள் பழக்கத்தில் உள்ளன. அன்னை திருச்சபை எல்லாவற்றையும் ஆதரித்து, வளர்க்க முயற்சிக்கிறது. அவற்றில் முக்கியமானது திருஇருதயப் பக்தி. இந்தப் பக்தியை வளர்ப்பதற்கென்றே பன்னிரண்டாம் பத்திநாதர் "தாகமாயிருக்கிறவன் என்னிடம் வந்து குடிக்கட்டும்" என்ற தலைப்பில் சுற்றுமடல் விடுத்தார். ஆனால் இத்திரு இருதயப் பக்தியைப் பரப்புவதற்கு அன்னையாம் திருஅவை எடுக்கிற முயற்சிகளுக்கு ஏற்ற பலன் விளைகிறதா? இப்பக்தி மக்களிடையே செல்வாக்குப் பெற்று வருகிறதா? இல்லை. "இயேசுவின் திருஇருதயப்பக்தி" என்ற தலைப்பில் ஒருவர் ஒரு பத்தகம் எழுதி அச்சகத்திற்கு அனுப்பினார். "இந்தப் பக்திக்கு இக்காலத்தில் மக்கள் மத்தியில் மார்க்கட்டு இல்லை. ஆகவே, வெளியிட முடியாது" என்ற பதில் வந்தது. இயேசுவின் திருஇருதயப் பக்திக்கு மக்களிடத்தில் மார்க்கட்டும், மதிப்பும் இல்லாமல் இருக்கலாம். ஆனால் இந்தப் பக்தி குறித்துக் காட்டும் இறைவனின் அன்பு இயேசுவில் வெளிப்பட்ட உண்மைக்கு இன்றும் என்றும் மக்களிடத்தில் மதிப்பு இருந்தே தீரும். ஏனென்றால் இறைவனின் அன்பால்தான் மனிதராக இந்த உலகம் வந்தார். அவரது அன்பாலேதான் அவர் உயிர் வாழ்கிறார்.

அவரது அன்பாலேதான் தன் பாவங்களுக்கு விமோசனம் பெறுகிறார். அவரது அன்பாலே தான் கடந்த காலத் துன்பங்களை மறக்கிறார். அவரது அன்பாலேதான் நிகழ்காலப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்கிறார். அவரது அன்பாலேதான் எதிர்கால இருளிலும் ஒளி பெறலாம் என்ற உறுதியோடு வாழ்கிறார். ஆகவே, கடவுளின் அன்புக்கு மட்டும் எந்நாளும் மதிப்பு இருந்தே தீரும்.

இயேசுவின் திருஇருதயப் பக்தி, இயேசுவின் அன்புக்கு அடையாளமாக இருக்கிறது. கடவுளின் அன்பு, இயேசு என்கிற கடவுள் மனிதனிடம் வெளிப்பட்ட மறைக்க முடியாத உண்மைக்கு அடையாளமாக உள்ளது. ஆனால் இக்கால மனிதர் அடையாளங்களை ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லை. அடையாங்கள் குறித்துக் காட்டும் உண்மைப் பொருளையே நேரில் பார்க்க, விரும்புகிறார். அடையாளங்களை நம்பி தன் வாழ்வைப் பலியிட அவர் தயாராக இல்லை. அந்த அடையாளம் எதைக் குறிக்கிறதோ அதை அவர். நேரில் கண்டுணர்ந்தால்தான் நம்புகிறார்.

பக்தி சார்ந்த காரியங்களிலும் இன்றைய மனிதர்கள் அடையாளங்களை அலட்சியம் செய்கிறார்கள். ஆகவே என்ன சொல்லுகிறான்? கடவுள் நன்மையின் வடிவமாக உள்ளார் என்று நா வலிக்கப் பேசாதே. இவர் எனக்கு என்ன 'நன்மை' செய்து வருகிறார்? அதை எப்படிச் செய்கிறார் என்பதைக் காட்டு, நம்புகிறேன் என்கிறான். கடவுள் உனக்காக விண்ணகத்தில் ஓர் இடம் தயாரித்து வைத்துக் கொண்டு காத்திருக்கிறார் என்று என்னிடம் பேசாதே. தற்போதைக்கு விண்ணகத்தை விட்டு விட்டு மண்ணகத்தைப் பற்றிப் பேசு. நான் வாழ்வது பூலோகம். வடிப்பது கண்ணீர், நான் வடிக்கும் கண்ணீரைத் துடைத்துவிடும் ஒரு கடவுளை எனக்குக் காட்டு, நம்புகிறேன் என்கிறார்.

ஆகவே, இக்கால மனிதருக்குக் கடவுளைக் காட்டவேண்டுமானால் அவரை அழகாகக் கற்பனை செய்து அற்புதமான படமாகத் தீட்டிய ஓவியத்தை அவரிடம் காட்டினால் போதாது. அதற்குப் பதிலாக அவலட்சணமான ஓர் ஏழையின் முகத்தில்தான் இன்றைய மனிதர் கடவுளைக் காண முன்வருகிறார். கிறிஸ்துவின் அன்பை இக்கால மனிதனுக்குக் காண்பிக்க விரும்பி அவரைக் கோவிலுக்கு அழைத்து வந்தால் போதாது. அக்கோவிலில் இயேசுவின் திருஇருதய சுரூபத்தைப் பிரமாண்டமாக எழுப்பி "பார், இயேசுவின் திருஇருதயம் உன்னை அணைகடந்த அளவு நேசித்த இருதயத்தைப் பார்" என்றால் நம்பமாட்டார்.

( தொடர்ச்சி 7ம் பக்கம்)

# மக்களை தரிசித்த மருத மடு அன்னை

மருதமடு அன்னைக்கு முடி சூட்டியதன் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு இவ்வருடம் ஆடி மாதம் 2ம் திகதி மடுத்திருப்பதியில் பெருவிழா கொண்டாடப்படுகின்றது. அதனை முன்னிட்டுக் கடந்த வருடம் (2023) ஆடிமாதத் திருவிழாவின் பின்பு மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு பிடலிஸ் லயனல் இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை அவர்களால் யூபிலிப் பிரகடனம் செய்யப்பட்டது. அதனைத் தொடர்ந்து யூபிலி வருடத்தை ஆரம்பித்து வைக்கும் விதமாக 100 அடி உயரக் கம்பத்தில் யூபிலிக் கொடி ஏற்றப்பட்டது. தொடர்ந்து திருச்செபமாலை வடிவில் செய்யப்பட்ட பலூன்கள் வானில் பறக்க விடப்பட்டது. அதனைத் தொடர்ந்து மறைமாவட்ட ரீதியாகவும், பங்குகள் ரீதியாகவும் பல ஆன்மீக ஆயத்தங்கள் இவ்வருடம் முழுவதும் இடம் பெறுகின்றன. பங்குமக்கள் ஒரே சமூகமாக மடுத்திருப்பதி சென்று மடு அன்னையைத் தரிசித்தல், ஆணைக்குழு இயக்கு நர்கள் தமது குழவைச் சேர்ந்த உறுப் பினர்களுடன் மடுத்திருப்பதியில் ஒரு நாளை செலவழித்தல், பங்குகளில் யூபிலியை முன்னிட்டு சிறப்புச் செபம், வழிபாடு, திருச்செபமாலை என்றெல்லாம் பல திட்டங்கள் யூபிலிக்கென்று நியமிக்கப்பட்ட சிறப்புக் குழுவினால் பரிந்துரைக்கப்பட்டு நடைபெற்று வருகின்றன.

இவ்யூபிலி ஆண்டின் பல்வேறுபட்ட ஆன்மீக நிகழ்வுகளில் மிக முக்கிய ஒரு நிகழ்வாக முன்னெடுக்கப்பட்டது தான் மருதமடு அன்னையின் பங்குகளுக்கான திருயாத்திரைப் பயணமாகும். அன்னைக்கு முடி சூட்டிய 1924ம் ஆண்டிலிருந்து ஒவ்வொரு 25 வருடமும் அன்னையின் திருச்சுருபமானது பங்குகளுக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளது. அதாவது 1949ம்ஆண்டு வெள்ளிவிழாவை முன்னிட்டும், 1974ம் ஆண்டு பொன் விழாவை முன்னிட்டும், மீண்டும் 1999ம் ஆண்டு 75 வருட நிறைவு காணப்பட்ட போதிலும் உள்நாட்டுப் போர் காரணமாக அன்னையின் திருப்பயணமனது ஒரு வருடம் பின் போடப்பட்டு 2000ம் ஆண்டில் மன்னார் மறை மாவட்டத்தின் அனைத்துப் பங்குகளுக்கும் கொண்டு செல்லப்பட்டது.

மீண்டும் அன்னையின் திருத்தலத்தை அடிக்கடி தரிசித்து ஆசீர் பெற்றுச் செல்லுகின்ற தென்பகுதியைச் சேர்ந்த மக்கள் மடுத்திருத் தலத்திற்கு வந்து செல்ல முடியாத நிலை காணப்பட்டபடியினால் அன்னையின் திருச் சுருபமானது பல மறை மாவட்ட ஆயர்களின் வேண்டுகோளுக்கிணங்க. தென்பகுதியின் சில பங்குகளுக்குக் கொண்டு செல்லப்பட்டது. மக்கள் கண்ணீர் சிந்தி, நாங்கள் அன்னையைத் தேடிப் போக முடியாமல் இருந்த போதும் கூட மடு அன்னை எங்களைத் தேடி வந்துவிட்டார் என்று அழுது கூறிய வார்த்தைகள் இன்றும் மறக்க முடியாத வார்த்தைகளாகக் காணப்படுகின்றது. அந்தவகையில்தான் இவ்வருடமும் நூற்றாண்டை முன்னிட்டு மருதமடு அன்னையின் திருச்சுருபமானது மன்னார், யாழ்ப்பாணம் மறைமாவட்டங்களுக்குக் கொண்டு செல்லப்பட்டது.

இவ்வருடம் தைமாதம் 7ம் திகதி தொடக்கம் 26ம் திகதி வரை மன்னார் மறைமாவட்டத்தின் 4 மறைக் கோட்டங்களைச் சேர்ந்த 41 பங்குகளுக்கும், சித்திரை மாதம் 2ம் திகதி தொடக்கம் 5ம் திகதி வரைக்கும் மன்னார் மறைமாவட்டத்தின் மாந்தை மறைக்கோட்டத்தைச் சேர்ந்த 8 பங்குகளுக்கும் தொடர்ந்து 6ம் திகதி தொடக்கம் 30ந் திகதி வரைக்கும் யாழ் மறைமாவட்டத்தின் அனைத்துப் பங்குகளுக்கும் கொண்டு செல்லப்பட்டது. மீண்டும் 30ந் திகதி யாழ் மறைமாவட்டத்தின் இறுதிப் பங்காகிய மல்லாவி பங்கிலிருந்து வாகனப் பேரணியாக யாழ், மன்னார் மறைமாவட்ட குருமுதல்வர்கள், யாழ், மன்னார் மறைமாவட்டத்தைச் சேர்ந்த பல குருக்கள், துறவிகள் புடைசூழ, அன்னையானவள் மருதமடுத் திருத்தலத்திற்குக் கொண்டு வரப்பட்டாள். அன்று மாலை மருதமடுத்திருத்தலத்தில் மன்னார் மறைமாவட்ட ஆயர் அதிவந்தனைக்குரிய இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை தலைமையில் கூட்டுத்திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது, 50ற்கு மேற்பட்ட குருக்களும் நூற்றுக்கணக்கான மக்களும் இவ் நன்றித் திருப்பலியில் கலந்து கொண்டார்கள்.



அருட்பணி பி. கிறிஸ்துநாயகம்
குருமுதல்வர்
மன்னார் மறைமாவட்டம்.

மருதமடு அன்னையின் மக்களைத் தரிசிக்கும் திருப் பயணமானது எவ்வித இடையூறுகளும் இன்றி நடைபெற்றதற்கு நன்றியாக இத்திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது.

இது ஒரு விசுவாசத் திருப் பயணம். மருதமடு அன்னை எமது பங்கிற்கு வருகின்றாள், அன்னையின் திருச்சுருபத்தைத் தொட்டு மன்றாடுவதற்கு எங்களுக்கு ஒரு சந்தர்ப்பம் கிடைத்திருக்கின்றது என்று ஆலயப் பக்கமே வராத ஆயிரக்கணக்கான வர்களை தன்னிடம் அழைத்த அன்னையின் உன்னதமான பிரசன்னம். நடக்கமுடியாத வர்களை சக்கர நாற்காலியிலும், நோயாளிகளையும், வயது முதிர்ந்தவர்களையும் ஏதோ ஒரு விதத்தில் கொண்டு வந்து அன்னையின் ஆசீரை பெற வைத்த அற்புதமான நிகழ்வு. இன, மதங்களைக் கடந்து ஆயிரக்கணக்கான ஏனைய மதத்தவர்களையும் தான் செல்லும் வீதிகளுக்கும், தங்கியிருக்கும் ஆயங்களுக்கும் அழைத்த அற்புதமாக தருணங்கள், ஒரு முறை அல்ல, இரு முறையல்ல, எனது ஆலயம், எனது பங்கு என்று மட்டுமல்ல, கிடைத்த அனைத்து சந்தர்ப்பங்களையும் பயன்படுத்திப் பல முறை அன்னையைத் தேடித் தேடிச் சென்று தரிசித்த உன்னதமான ஆன்மீகம், இதற்குக் குருக்கள், துறவிகளும் விதிவிலக்காக இருக்கவில்லை... *(தொடர்ச்சி 6ம் பக்.)*




## என் கேள்விக்கென்ன பதில்!

அருட்பணி செ. அன்புராசா

*(யோசப், யாழ்ப்பாணம்)*

**கே: மடுமாதாவின் யாழ். வருகை யைப் பற்றி நீங்கள் ஒன்றும் கூறவில்லையே! அது ஏன்?**

**ப:** யோசப், அதுபற்றி நீங்கள் ஒரு கேள்வியைக் கூடக் கேட்கவில்லையே, அது ஏன்!? புரிகின்றதா? நீங்கள் கேட்பதற்குத்தான் நான் பதில் தருகின்றேன். நிற்க, மன்னார், யாழ்ப்பாண மறை மாவட்டங்களில் மடுமாதாவின் வருகை மிகுந்த ஆன்மீக எழிச்சியை ஏற்படுத்தியிருந்தது, நிறைந்த ஆற்றுப்படுத்தலையும் ஆசீர்வாதங்களையும் பொழிந்திருந்தது, சமூகங்களுக்கிடையில் சமயங்களுக்கிடையில் நல்ல புரிந்துணர்வையும் நல்லிணக்கத்தையும் உருவாக்கியிருந்தது. இவற்றைத் தக்கவைப்பதும், பெற்றுக்கொண்ட ஆசீர்வாதத்தில் தொடர்ந்து நாம் வளர்வதும் வாழ்வதும் அவசியமானது.

*(விஜயன், மன்னார்)*

**கே: சிலரைச் சந்திக்கவே கஸ்ரமாக இருக்கின்றது! அப்படியாக அவர்கள் நடந்து கொள்கின்றார்கள். என்ன செய்யலாம்?**

**ப:** விஜயன், 'நிம்மதியாக நீ வாழ வேண்டுமெனில் உன் மனத்தின் கவலைகளைத் தூண்டிவிடும் சிலரைச் சந்திப்பதையும் அவர்களைப் பற்றிச் சிந்திப்பதையும் தவிர்ப்பது நல்லது' என்கின்றார் கௌதம புத்தர். நல்ல சிந்தனை! சிந்தித்து சந்திக்கும் நபர்களை முடிவு செய்யுங்கள்!

*(கருணா, யாழ்ப்பாணம்)*

**கே: இன்று பலரும் பலவற்றுக்கு அடிமைப்பட்டு இருக்கின்றார்கள். இன்று பலரும் தொடுபேசிக்கு அடிமைப்பட்டு இருக்கின்றார்கள் என்று தெரியாமலேயே அதற்கு அடிமைப்பட்டுக் கிடக்கின்றார்கள். பார்க்கவே பரிதாபமாக இருக்கின்றது. என்ன செய்யலாம்?**

**ப:** கருணா, அண்மையில் ஒரு வாசகத்தைப் படித்தேன்: "சொறி சிரங்கு வந்தவன் கூடக் கையைக் வைத்துக்கொண்டு கொஞ்ச நேரம் சும்மா இருப்பான். ஆனா, 'ரச்போண்' வைத்திருப்பவனின் கை சத்தியா கொஞ்ச நேரங்கூடச் சும்மா இருக்காது!" என்று அது இருந்தது. உண்மை தானே கருணா! தொடுபேசிக்கு அடிமைப்பட்டுக் கிடக்கின்றோம் என்பதை முதலில் ஏற்றுக் கொள்வோம்! என்னசெய்யலாம்? இரண்டு வழிகள் உண்டு! விட்டு விடுவதும், விட்டு விலகி இருப்பதும்! விட்டு விடலாம்: ஆனால், ஓர் இளைஞனைப் பிடித்துக்கொண்ட கரடியின் கதைபோன்று நாம் விட்டாலும் அது விடுவதாய் இல்லையே என்ற பரிதாநிலை! விட்டுவிலகி இருக்கலாம்: ஆயினும், அதன் தேவைப்பாடும் இருக்கின்றது! அதனால், இப்பழக்கத்திற்குக் குறிப்பிட்ட இடைவெளியில் விடைகொடுப்பதும் விட்டு விலகி இருப்பதும் நன்று!

*(அன்ரன், யாழ்ப்பாணம்)*

**கே: 'இலங்கையில் நீதி செத்து விட்டது என்றவர்கள் உட்கட்சிப் பிணக்குகளுக்கு நீதிமன்றையே நாடினர்' என அமைச்சர் ஒருவர் தமிழரசுக் கட்சியின் இன்றைய நிலையைக் குறித்து எடுத்துக் கூறியது பற்றி என்ன கருதுகின்றீர்கள்?**

**ப:** அன்ரன், அரசனாய் இருந்தாலென்ன ஆண்டியாய் இருந்தாலென்ன! ஒருவர் சொல்வது நியாயமானது என்றால் நியாயமானது என்றுதானே சொல்லவேண்டும்! கூறியதில் நியாயம் இருக்கின்றது.

*(ஆனந்தன், கிளிநொச்சி)*

**கே: வருகின்ற வாரம் (இவ்விதழ்) என் கேள்விக்கென்ன பதில் 100வது தொடராகத் தொடருகின்றது. இந்த 'செஞ்சறி' குறித்து என்ன நினைக்கின்றீர்கள்?**

**ப:** ஆனந்தன், அடிப்பது என்பணி! அதனை நான் ஆனந்தமாகச் செய்து வருகின்றேன். அது, 'சிக்சர்'ஆக இருந்தாலென்ன, 'செஞ்சறி' யாக இருந்தாலென்ன!

*(குணம், வவுனியா)*

**கே: தமிழ்க் கட்சிகளுக்கிடையில் பெரும் பிளவுகள் இப்போது ஏற்பட்டிருக்கின்றன. அதிலும் குறிப்பாக, தமிழரசுக் கட்சி ஒரு காலத்தில் தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவம் செய்யும் கட்சியாக இருந்து, விடுதலைப் புலிகளின் காலத்தில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு என்ற பெயரில் தமிழரசுக் கட்சிச் சின்னமாகிய வீட்டுச் சின்னத்தில் போட்டியிட்டு 22 நாடாளுமன்ற உறுப்பினர்களை வடகிழக்கு மாகாணங்களில் பெற்றுக்கொண்டது. இப்போது தமிழ்த் தேசிய கூட்டமைப்பு பிளவுபட்டு நிற்கும் நிலையில், தமிழரசுக் கட்சியே தனக்குள் பிளவுண்டு நீதி மன்றத்தில் நிற்கின்றது. வீட்டுக்கு என்ன நடக்கும்!?**

**ப:** குணம், வீடு, வீடா இருந்தாத்தானே என்ன நடக்கும் என்று சொல்வதற்கு! இப்போதைக்கு, 'வீட்டில்' இருப்பவர்கள் 'கோட்டில்' வந்துநிற்கின்றார்கள் என்பதைத் தவிர வேறொன்றும் சொல்வதற்கில்லை!

*(ரதி, மன்னார்)*

**கே: சில இடங்களில் பக்கத்துவீட்டுச் சண்டைகள் பல ஆண்டுகளாக நடைபெறுகின்றன. இவை முடிவுக்கு வராமல் ஏன் நீண்டு கொண்டு போகின்றன?**

**ப:** ரதி, ரஸ்யா உக்கிரேன் போர் ஒருநாள் முடிவுக்கு வரும்! அதுபோல இஸ்ராயேல் பலஸ்தீனச் (கமாஸ் போராளிகளுக்கும் இடையிலான) சண்டையும் முடிவுக்கு வரும்! ஆனால், சில 'பக்கத்து வீட்டுச் சண்டைகள்' அவ்வளவு விரைவாக முடிவுக்கு வராது! ஏனென்றால் இரு வீட்டாரும் இவ்விடயத்தில் ஒரு 'க(ை)ர கண்டுதான்' விடுவார்கள்! கரைகாண்பதற்கு அங்கு அநேகமாகக் கடல் இருக்காது! அதனால், முதலில் கடலைக் கண்டுபிடித்து, அதன்பின்னர் அக்கடலின் கரையைக் கண்டுபிடிக்க வேண்டும்! இதற்கு நிறைய நாட்கள் தேவைப்படும் என்பதால், 'நமது பக்கத்து வீட்டுச் சண்டைகள்' அவ்வளவு விரைவில் முடிவுக்கு வரா! அப்படி இருவீட்டாரும் இயலாக்கட்டத்தில் ஒரு முடிவுக்கு வந்தாலும், அயல்வீட்டார் விடமாட்டார்! காரணம் அவர்களுக்குப் பொழுதுபோக்கு இல்லாமல் போய்விடும் என்தால்! அதனால் பக்கத்து வீட்டுச் சண்டைகள் நைல்நதி போல நீண்டு கொண்டுதான் போகும்!

*(நிலா, மன்னார்)*

**கே: கடந்தகால அனுபவங்களிலிருந்து கற்றுக்கொள்வதுதானே அனுபவம் என்பதாகும்! ஆனால், யாரும் கடந்த காலங்களிலிருந்து கற்றுக்கொள்வதாகத் தெரியவில்லையே! ஏன்?**

**ப:** நிலா, கடந்த காலங்களிலிருந்து எதனையும் கற்றுக்கொள்ளவில்லை என்பதைக் கற்றுக்கொடுப்பதுதான் அனுபவம் என்கின்றார்கள்! இன்னுமொரு வகையில் கூறினால், அனுபவம் என்றால் கடந்த காலத்தில் இருந்து எதனையும் கற்றுக் கொள்ளவில்லை என்பதுதான் கடந்த காலம் கற்றுத்தருகின்ற பாடம்! விளக்கத்தைப் பார்த்துத் தலைசுற்றாமல் உங்களைப் பார்த்துக் கொள்ளுங்கள் நிலா!

*(ஸ்ரெலா, கொழும்பு)*

**கே: பெண்கெளுக்கு எதிரான வன்முறைகள் எப்போதும் இருந்து வருகின்றது. ஆனால் இப்போது இன்னும் அதிகமாக இருக்கின்றது! ஏன்? நம் சமூகம் எங்கே போய்க்கொண்டிருக்கின்றது?**

**ப:** ஸ்ரெலா, இதற்குப் பல காரணங்கள் உண்டு. ஆணாதிக்கம், சட்டத்தில் உள்ள ஓட்டை உடசல்கள், பெண்களைச் சமமாக ஏற்று மதிப்பளிக்கின்ற கல்விமுறையை இன்னும் வளர்க்காமை, இதனை வீட்டில் பெற்றோர் பிள்ளைகளுக்கு ஊட்டாமை போன்ற பலவற்றைக் கூறலாம். இவ்விடயத்தைவைத்துக்கொண்டு இன்னுமொரு படி மேலேசென்று நம் சமூகத்தின் நிலை பற்றிக் கூறலாம். "பெண்கள் அடைந்துள்ள முன்னேற்றத்தின் அளவைக் கொண்டே ஒரு சமூகத்தின் முன்னேற்றத்தை அளவிட முடியும்" என்பார் அம்பேத்கார். அவர் சொன்ன அளவுகோல் ஒரு சமூகத்தின் முன்னோற்றத்தை அளவிடக் கூடியது! அளவிட்டுப் பார்த்துக்கொள்ளுங்கள் ஸ்ரெலா.

# நற்கருணை இயேசுவின் உடனிருப்பு...!



**1945** ஆம்ஆண்டு ஆகஸ்டு மாதம் 6 மற்றும் 9 ஆகிய நாட்களில் அமெரிக்க ஐக்கிய நாடு. ஜப்பான் நாட்டின் ஹிரோஷிமா, நாகசாகி ஆகிய இரு நகரங்களில் வீசிய இருபெரும் அணுகுண்டுகளால் இலட்சக்கணக்கான மக்கள் கொல்லப்பட்டனர். அப்போது அந்நகரின் புறநகர் பகுதியில் இருந்த இயேசு சபை நவதுறவியர் இல்லத்தில் பயிற்சியாளராக இருந்தவர் இயேசு சபையின் முன்னாள் தலைவர் பேத்ரோ அருப்பே அவர்கள். அந்த நவதுறவியர் இல்லம் ஒரு மருத்துவ-மனையாக மாறியது. அருட்தந்தை அருப்பே அவர்கள் மருத்துவம் படித்தவர் என்பதால், ஹிரோஷிமா தாக் குதலுக்குப்பின், நவதுறவியர் இல்லத்தில் மட்டுமல்லா மல், வெளியிலும் சென்று, தன்னால் இயன்றளவு மருத் துவ உதவிகள் செய்து வந்தார்.

ஒருநாள் மாலை அவர் வீடு வீடாகச் சென்று உதவிகள் செய்து வந்தபோது, நாகமுராசான் என்ற ஏழைப் பெண் ணின் வீட்டுக்குச் சென்றார். அணு குண்டின் கதிர்வீச்சால் அந்த இளம்பெண்ணின் உடல் பெருமளவு எரிந்துபோய், கொடூரமான வேதனையுடன் அப்பெண் உயிருக்குப் போராடிக் கொண்டிருந்தார். அவருக்கு முதலுதவி செய்ய முனைந்தார் பேத்ரோ அருப்பே. அப்போது கொடிய வேதனையில் உயிருக்குப் போராடிக் கொண்டிருந்த நாகமுரா முனங்கிக் கொண்டே, “தந்தையே! எனக்கு நற்கருணை கொண்டு வந்திருக்கிறீர்களா?” என்று அவரைப் பார்த் துக் கேட்டார். “இதோ! கொண்டு வந்திருக்கிறேன்” என்று கூறியவாறே தன் கரங்களில் வைத்திருந்த சிறிய நற்கருணைப் பேழையைத் திறந்து நற்கருணையை அவருக்கு வழங்கினார். சொல்லொண்ணாத் துயரத் தின் மத்தியிலும், இன்முகத்தோடு இயேசுவைத் தன் உள்ளத்தில் ஏற்ற சிறிது நேரத்திலேயே அந்த இளம்பெண்ணின் உயிர் பிரிந்தது. உயிரோட்டம் நிறைந்த இந்த நிகழ்வை ‘நற்கருணையில் வளர்ந்தேன்’ என்ற நூலில் பதிவு செய்திருக்கிறார் தந்தை பேத்ரோ அருப்பே.

காயப்பட்ட மனுக்குலத்திற்கு முன், காயப்பட்ட கடவுளைக் காட்டும் ஒரு விழாவே இயேசு வின் திரு உடல், திரு இரத்தப் பெருவிழா! அன்பை ஆயிரமாயிரம் வழிகளில் நாம் வெளிப்படுத்தலாம். அந்த வழிகளிலேயே மிகவும் சிறந்தது, நாம் அன்பு கொண்டவருடன் தங்கியிருப்பது. அதாவது, பிறருடன், பிறருக்காக முழுமையாகப் பிரசன்னமாகி இருப்பதே அன்பு. இந்த முழுமையான பிரசன்னம் வாழ்நாளின் ஒவ்வொரு நொடியும் தொடர முடிந்தால், அது அன்பின் சிகரம். அத்தகைய அன்பின் அருளடையாளம் தாம் இயேசுவின் திரு உடலும், திரு இரத்தமும். இந்தத் தூய்மைமிகு உடலும், இரத்தமுமே நம் வாழ்வின் மையம். திருஅவையின் மையமும் நற்கருணைதான். இதையே திருத்தந்தை புனித இரண்டாம் ஜான்பால் “நற்கருணை திருஅவையை உருவாக்கு கிறது் திரு அவை நற்கருணையை உருவாக்குகிறது” என்கிறார். “நற்கருணையின்றிக் கிறிஸ்தவ உறவுகள் இல்லை” என்கிறார் புனித தாமஸ் அக்குவினாஸ்.

சான் பிரான்சிஸ்கோ உயர் மறைமாவட் டத்தின் பேராயராக இருந்த ஜான் குவின், தன் மறை மாவட்டத்தில் பணிபுரிய புனித அன்னை தெரசாவை யும். சில சகோதரிகளையும் அழைத்து. அவர்களுக்குத் தேவையான எல்லா வசதிகளையும் ஏற்படுத்திக் கொடுத்தார். ஆனால், அன்னை தெரசாவோ அனைத்து வசதிகளையும் குறைத்தபின், இறுதியில் பேராயரிடம், “ஆயரே, இந்த வீட்டில் எங்களுக்குத் தேவையான தெல்லாம் ஒரு நற்கருணைப் பேழை மட்டுமே” என்று சொன்னார்.

திருத்தந்தை பிரான்சிஸ் கிறிஸ்துவின் திரு உடல் மற்றும் திரு இரத்தப் பெருவிழா அன்று வழங் கிய மூவேளைச் செப உரையில், “நற்கருணை நம் தன்னல எண்ணங்களைச் சுட்டெரித்து, இயேசுவோடு முழுமையாய் நம்மை ஒன்றிணைக்கிறது. இப்பெரு விழா, கிறிஸ்துவின் பேருண்மையில் வாழ்வதற்கு நம்மை அழைத்துச் சென்று, அவரில் நம்மை மாற்று-கிறது. கிறிஸ்துவின் திரு உடல் மற்றும் திரு இரத்தத்-தால் நாம் ஊட்டம் பெறுவதால் அவரின் அன்பைப் பெற்று, அதை நமக்கென்றே வைத்துக்கொள்ளாமல், மற்றவரோடு பகிர்ந்துகொள்கிறோம். கடவுளின் அன்பைப் பெறுகையில், அவரின் திட்டம் உலகில் பிரசன்னமாக இருப்பதற்கு நம்மை உந்தித் தள்ளுகின் றது. வாழ்வில் தனிமையிலும், புறக்கணிக்கப்பட்ட நிலையிலும் வாழ்வோரை நாம் வரவேற்கின்றோம்” என்று கூறினார் (ஜுன் 3, 2018). இயேசுவின் திரு உடல், திரு இரத்தத்தால் ஊட்டம் பெற்ற அன்னை தெரசா உலகில் உருவாக்கிய மாற்றங்களை நாம் அறிவோம்.

இறைவன் நமக்கு வழங்கியுள்ள மேலான கொடையே நற்கருணை. நற்கருணை என்பது மனி-தர்கள் நடுவே இருக்கும் இறைவனின் உறைவிடம்: இறைவனின் உடனிருப்பு. நற்கருணை வழியாகத் தம் உடனிருப்பைக் கிறிஸ்து நம் வாழ்வில் வெளிப்படுத்துகிறார். நற்கருணையில் கிறிஸ்து முழுமையாகவும், நிறைவாகவும் இருக்கிறார். இயேசுக்கிறிஸ்து தனிச்சிறப்பான, ஒப்பிடவியலா வகையில் நற்கருணையில் உடனிருக்கிறார் (க.தி.ம. 1773-1377). இதில் இயேசுவே கடவுளாகவும், மனிதராகவும் அளவில்லாமல் எழுந்தருளியிருக்கிறார் (யோவா 6:35). நற்கருணை வழியாகக் கடவுள் நம்முள் இருக்கிறார். இதுதான் நற்கருணை யின் ‘உடனிருப்பின் உச்சம்’. இரண்டாம் வத்திக்கான் சங்கம் ‘நற்கருணை கிறிஸ்தவ வாழ்வின் ஊற்றும், மையமுமாக இருக்கின்றது’ என்று கூறுகின்றது (திருச்சபை எண் 11). இறைமகன் இயேசு ஏன் அப்ப, இரச வடிவில் தம் பிரசன்னத்தை இந்த உலகில் விட்டுச் சென்றார்? அப்பமும், இரசமும் இஸ்ரயேல் மக்கள் தினமும் உண்ட எளிய உணவாக இருந்தது. எந்த ஓர் உணவையும் நாம் உண்டபின், அது நம் உடலின் இரத்தமாகவும், தசையாகவும், எலும்பாகவும் மாறிவிடுகிறது. எனவே, உணவான அப்பத்திற்கும், இரசத்திற் கும் உள்ள இந்த அடிப்படைக் குணங்கள் தமக்கும் உண்டு என்பதை நிலைநாட்ட இயேசு இந்த வடிவைத் தேர்ந்தெடுத் தார். நாம் தினமும் உண்ணும் உணவாக நம் உடலா-கவே மாறி, நம்மை வாழ வைக்கும் உணவாக இறைவன் நம்முடன் வாழ்கிறார்.

இயேசு தம் திரு உடலையும், திரு இரத்தத்தை

**நற்கருணைக் கொண்டாட்டத்தின்போது நாம் கடவுளின் குடும்பமாக, கிறிஸ்து வின் உடலாக மாறுகின்றோம். ஆகவே, நாம் உட்கொள்கின்ற அப்பமும், பருகுகின்ற இரசமும் இயேசுவோடு நம்மை இணைத்து, கடவுளின் வாழ்வில் நம் வாழ்வு இணைந்து ஒன்றிப்பதற்கும், அதன் வழியாக நாம் ஒருவர் ஒருவரோடு சகோதர அன்பில் இணைவதற்கும் வழியாகிறது**

யும் பலியாக நமக்கு வழங்கி, நம் உயிரில் கலந்து, நம்முள் ஒன்றாகிப் போனார். இதனை இன்றைய வாசகங்கள் நன்கு எடுத்தியம்புகின்றன. இன்றைய முதல் வாசகத்தில் (விப 24:3-8) ஆண்டவராகிய இறைவனுக்கும், இஸ்ரயேல் மக்களுக்கும் இடையே நடக்கும் உடன்படிக்கையை வாசிக்கின்றோம். “ஆண்டவர் கூறிய வார்த்தைகள் அனைத்தையும் நாங்கள் செயல்படுத்துவோம்” (விப 24:3) என்று இஸ்ரயேல் மக்கள் ஒருமித்தக் குரலில் கூறும்போது. மோசே பலியிடப்பட்ட விலங்கின் இரத்தத்தை மக்கள் மீதும், பீடத்தின்மீதும் தெளிக் கிறார். பலியான விலங்குகளின் சாவு, இரத்தம் அனைத்தும் அடையாளங்களே. ஆனால், உண்மையான பலி கிறிஸ்து வின் கல்வாரிப் பலி இதுவே உன்னதமான மேன்மையான பலி. அவரே பலரின் பாவங்களைப் போக்கும் பொருட்டு, ஒரேமுறை தம்மைத் தாமே பலியாகக் கொடுத்தார் தம் உட லையே பலியாகச் செலுத்தினார். இதுவே என்றென்றைக்கும் நிறைவான பலி என்று எபிரேயர் நூலின் ஆசிரியர் இன் றைய இரண்டாம் வாசகத்தில் (எபி 9:11-15) குறிப்பிடுகிறார். இந்தப் பலியையே திருப்பலியில் அருளடையாள முறையில் நினைவுகூர்கிறோம்.

‘இது உங்களுக்காகக் கொடுக்கப்படும் எனது உடல்’ - ‘இது உங்களுக்காகச் சிந்தப்படும் எனது இரத்தம் என இயேசு நற்கருணையை ஏற்படுத்தியபோது கூறிய இந்த வார்த்தை கள் மூலமாகத் திருப்பலியில் புனிதப்படுத்தப்பட்ட அப்பம் உண்மையில் இயேசுவின் உடலாக மாறுகிறது என்று நாம் நம்புகின்றோம். திரு அருளடையாள முறையிலே அப்ப-இரச அடையாளங்களிலே இயேசு உண்மையாகவே இருக்கிறார் என்பது திரு அவையின் படிப்பினை. திருப்பலியில் எழுந்தேற் றத்தின்போது அப்பமும், இரசமும் இயேசுவின் உடலாகவும், இரத்தமாகவும், முழுமையாகவும், நிறைவாகவும் மாற்றம் பெறுகின்றன.

(க.தி.ம. 1373). ‘இம்மானுவேல்’ அதாவது ‘கடவுள் நம்மோடு’ என்ற பெயருடன் அறிமுகமான இயேசு, தம் உலக வாழ்வுக்குப் பின்னும் நம்மோடு தங்கியிருக்கிறார் என்பதைத் தம் திரு உடல், திரு இரத்தம் என்ற மறையுண்மையின் வழியாக நிலைநாட்டினார். இயேசுவின் திரு உடல், திரு இரத்தம் - அவரது வாழ்வு இன்று நமக்கு விடுக்கும் அறைகூவல்கள் என்ன?

முதலாவதாக, நற்கருணைக்

அருட்பணி ஜெ.ஞானசேகரன்

கொண்டாட்டத்தின்போது நாம் கடவுளின் குடும்பமாக, கிறிஸ்து வின் உடலாக மாறுகின்றோம். ஆகவே, நாம் உட்கொள்கின்ற அப்பமும், பருகுகின்ற இரசமும் இயேசுவோடு நம்மை இணைத்து, கடவுளின் வாழ் வில் நம் வாழ்வு இணைந்து ஒன்றிப்பதற்கும், அதன் வழியாக நாம் ஒருவர் ஒருவரோடு சகோதர அன்பில் இணைவதற்கும் வழியாகிறது. எனவே, ஒன்றாகக் கூடும் அனைவரும் இயேசுவின் ஒரே உடல் என்ற உணர்வில் பிளவுகளையும், பிரிவினைகளையும் அகற்றி, ஒரே மனமும், ஒரே நோக்கமும் கொண்-டிருப்பது அவசியம்.

இரண்டாவதாக, இன்று எண்ணற்ற பேர்கள் நம் நடுவில் வாழ்வை இழந்து தவிக்கின்றனர். வாழ் விற்கான வழியைத் தேடி அலைகின்றனர் வாழ்வில் நிறைவையும், நிம்மதியையும் பெற ஆசைப்படுகின் றனர். இவர்களுக்காக இறைமகன் இயேசு தம் திரு உடல், திருஇரத்தத்தின் வழியாக விட்டுச் சென்றுள்ள அன்பையும், தியாகத்தையும் வாழ்வாக்க முனை வோம். தம் உயிரையே பலியாக மக்களுக் கென வழங்கிய இயேசுவைப்போல், நாமும் விளிம்பு நிலை மக்களின் நல்வாழ்வுக்கு நம்மையே வழங்கும் வழி-களைக் கற்றுக்கொள்வோம்.

நிறைவாக, நாள்தோறும் நம் இதயம் நுழை-யும் இயேசுவின் திரு உடலும், திரு இரத்தமும் நம் உயிரில் கலந்து, அவரது உயிரிலும், உறவிலும் நம்மை நிலைநிறுத்துகிறது. ஆம், இயேசு தமது உடலையும், இரத்தத்தையும் நமக்கு வழங்குவதன் வழியாக, நமது உயிருக்குள் ஒன்றாகி, நாள்தோறும் நம்முள் வாழ்கிறார். கிறிஸ்துவிடமிருந்து நாம் பெற்றுக் கொண்ட அவரது என்றுமுள்ள அன்பைப் பிறரோடு பகிர்ந்து வாழ்வோம். இயேசுவின் உயிரளிக்கும் உடனிருப்பை நாம் பிறருக்கும் வழங்குவோம். அதற்காக இந்நாளில் சிறப்பாக மன்றாடுவோம். •

## உள்ளொளி

நீரூற்றைப் போன்று வளமான வாழ்வளிப் பவர்களாக நம் சிந்தனை, சொல், செயல் அமைந்-திட உறுதியெடுப்போம். பிறரைக் குணப்படுத்தும் சிந்தனைகளை நமதாக்கிட, தடுமாறுபவர்களுக்கு உடனிருத்தலின் வழியாக உறுதியளித்திட வேண்டு மென்றால், நம்மிடையே உள்ள மாறுபட்ட சிந்தனைகளைத் தூக்கியெறிந்திடுவோம். இல்லை யென்றால் அது நம்மையும், சுற்றியுள்ளவர்களையும் அழித்துவிடும்.

தண்ணீர் தேங்கி நின்றால் குட்டை. மேலி ருந்து விழுந்தால் அருவி. ஓடினால் ஆறு. தேங்கி நிற் கும் தண்ணீரே சாக்கடையாக மாறுகிறது. உள்ளம் என்ற கேணிக்குள் நீர் தேங்கிவிடாமல் புதிய ஊற்று-கள் உருவாக வேண்டும். அப்போது அது பிறருக்குப் பயனுள்ளதாய் அமையும். மனதில் நிம்மதி பிறக் கும். இந்த நிம்மதியை யாரும் எங்கும் எப்போதும் தொலைக்க முடியாது. எனினும் எல்லாருமே தேடிக் கொண்டிருக்கிறோம். அது நமது உள்ளம் என்னும் கேணிக்குள் புதைந்து கிடப்பதை அறிவதில்லை. எப்போது நமக்குள் தேடுகின்றோமோ அப்போதுதான் அடுத்திருப்பவர்களை அறிந்து கொள்ள முடியும். நம்மைப் புடமிடுவோம். நம்மில் இருக்கின்ற விலை மதிப்பில்லா மதிப்பீடுகளுக்கு உருக்கொடுப்போம். •

# சகிப்பதா? சரிசெய்வதா?



**மு. இருதயராஜ்**

'பொறுமையும், சகிப் புத்தன்மையும் ஒன்று தானே!' எனும் ஐயம் சிலருக்கு உண்டு. இரண்டிற் கும் தனித்த வேறுபாடுகள் உள்ளன. நாம் விரும்பும் இலக்கையோ அல்லது ஒரு பொருளையோ அடைவதற்கு ஆகும் காலச் சூழலில், எதிர்வரும் இன்னல்களைச் சந்தித்து வெற்றியைப் பெறும் வரை அமைதி காத்தலே பொறுமை ஆகும். வேறுபாடு மற்றும் முரண்பாடுகளைப் புரிந்து ஏற்றுக் கொள்ளும் பக்குவநிலைதான் சகிப்புத் தன்மை.

வேறுபாடுகள் மற்றும் முரண்பாடுகளை ஏற்றுக் கொள்ள மனம் இல்லாமல், பொறுமை இழந்து, தன்னிலை மறந்து எதிர்வினை ஆற்றும் சகிப்புத்தன்மை அற்ற செயல் தன்னையும், சுற்றி உள்ளோரையும் அழித்துவிடும்.

'இது எல்லாத்தையும் சகிச்சுக் கிட்டு வாழ வேண்டியதா இருக்கு' எனும் வார்த்தையை ஏறக் குறைய பாகுபாடு இல்லாமல் எல்லா இடங்களிலும் கேட்க முடியும். விரும்பி ஏற்றுக் கொள்ளும் சகிப்புத் தன்மை நமக்கு அனுபவத்தையும், நல்ல புரிதலையும் தரும். வேறு வழியின்றி வேண்டா வெறுப்போடு அணுகுவது மன அழுத் தத்தையும், தீராக் கோபத்தையும் மட்டுமே தரும்.

சிறுவயதில் வலிக்கிற மாதிரி நடித்ததும், இப்போது வலிக்காதது போல நடிப்பதும் சகிப்புத் தன்மையின் படிப்படியான மாறுதல் என்று சொல் வதா? வேறு வழியில்லை, ஏற்றுக் கொள்ள வேண்டிய கட்டாயம் எனும் நிலைக்குத் தள்ளப்பட்ட உணர்வா? இவையெல்லாம் ஒருபுறம் இருந்தாலும், சகிப்புத்தன்மை என்ற ஒன்று இல்லையென்றால், பல்வேறு சிக்கல்கள் உருவாக முழுமுதல் காரணமாக மாறிவிடும். அதற்காக நடப்பதையெல்லாம் பார்த்துவிட்டுக் கண்டும் காணாமல் செல்வதல்ல. ஒருவரின் செயல் உங்களுக்கு எரிச்சலைத் தந்தாலும் சகித்துச் செல்கிறீர்கள் என்றால், நீங்கள் அவரை அன்பு செய்ய ஆரம்பித்து விட்டீர்கள் என்றுதான் பொருள்.

இந்தத் தலைப்பில் இங்கு பேச வேண்டிய தேவையென்ன? நாம் பணிபுரியும் இடங்களில் சகிப்புத்தன்மை அற்ற செயலால் பொறுமையிழந்து, பல்வேறு சிக்கல்கள் ஏற்பட்டு, பலர் பலவிதமான மன உளைச்சலுக்கு உள்ளாவதை நாம் கண்டி ருப்போம். ஏன்,நாம்கூட அவ்வாறான சூழலைக் கடந்திருப்போம். இவற்றை எப்படிச் சரிசெய்வது ? சரி செய்து போவது நல்லதா? இல்லை, சகித்துப் போவது நல்லதா?

இவ்வாறு சகித்துக்கொண்டே மறைமுகச் சிக்கல்களைத் தந்துவிடும். ஒரு கட்டத்தில் மன அழுத்தம் ஏற்பட்டு, யாரை, எதற்காக நேசிக்க ஆரம்பித்தோமோ அவர்களை அதே காரணத்திற்காக வெறுக்கவும் ஆரம்பித்து விடுவோம். ஆதலால் ஒரு கட்டத்தில் பொறுமை எல்லை தாண்டும் சூழலில் அதைச் சரிசெய்து விடுவது நல்லது.

ஒரு நெரிசலான கூட்டத்தில் நீங்கள் இருக்கும் போது, உங்களைப் பின்னால் இருந்து ஒருவர் எதேச்சையாக மோதிவிடுகிறார். 'சட்'டென்று கோபம் கொண்டு, நீங்கள் திரும்பிப் பார்க்கும்போது உங்களுக்குத் தெரிந் தவர் என்றால், அந்தக் கோபம் அடங்கி விடும், நீங்கள் மிகவும் விரும்பும் மனிதர் என்றால், கோபம் காணாமல் கூடப் போய்விடும். ஆனால், அவர் தெரியாத நபர் என்றால் சற்றுக் கோபம் வரும். உங்களுக்கு அறவே பிடிக்காதவர் என்றால் கோபம் தலைக்கேறி, என்ன செய்வதென்று கட்டுப்பாடு இல்லாமல் வார்த்தைகள் வெடித்து விழும். அந்தக் கூட்டத்தையும், சூழலையும் புரிந்து கொள்ளும் பட்சத்தில் உங்களுக் குள் ஒரு சகிப்புத் தன்மை இருக்கும், அது உங்களைப் பக்குவப்படுத்தும்.மாடியில் இருந்து துப்பினால் குடிசை மீது விழும். குடிசையில் இருந்து துப்பினால் மாடியே விழும் எனும் வாக்கியத்தின் வீரியத்தை உணர்ந்தால் சகிப்புத்தன்மையின் வீரியத்தையும் நாம் உணர முடியும். இதன் உள்ளார்ந்த அர்த்தத்தை மனித வளத்துறையில் உள்ளவர்கள் நனக்கு அறிவர்.

பணிபுரியும் இடத்தில் பணியாளருக்கும், நிறு வனத்தின் மேல்மட்டத்தில் இருப்பவர்களுக்கும் இடையில் பாலமாகச் செயற்பட்டு,நிறுவனத்தின் குறிக்கோளை அடைய வேண்டிய முயற்சிகள் எடுப்பது ஒவ்வொரு வரின் பொறுப்பு என்றாலும், கொஞ்சம் கூடுதல் பொறுப்பு என்றுதான் சொல்லியாக வேண்டும். மனிதர்களை அவ்வளவு எளிதில் எடைபோட்டு, ஒன்றை நிறைவேற்றி விட முடியாது. நிறையப் புரிதலும், கொஞ்சம் பொறுமையும் வேண்டும். புரிதலுக்கு முதல் படியாக இருப்பது சகிப்புத் தன்மைதான். இதைச் சரியாகக் கையாண்டால் சிறப்பான மனிதராக வலம்வர முடியும்.

முழுவதும் சகித்துக்கொண்டே செல்வது நல்லதில்லைத்தானே! அப்படிச் செல்லும்போது நம் மதிப்புக் குறைந்து விடாதா? சகிப்புத்தன்மை ஓர் எல்லையைக் கடந்து விட்டால் அது மிகப்பெரிய அடக்க முடியாத கோபமாக வெளிப்படும். நம் நாட்டார் வழக் காற்றியல் தெய்வங்களின் வரலாற்றைப் புரட்டிப் பார்த்தால் தெரியும், அடக்க முடியாத கோபமும், அழுத்தமும் வெளிப்படும்போது, நாம் இதுவரை பார்த்திராத ஒரு முகத்தைப் பார்க்க நேரிடும். அப்படிப் பொங்கியெழும் குணத்தை, செயலைப் பயந்து வணங்கும் சூழல் ஏற்படும். இம்மாதிரியான சூழல் சில நிறுவனங் களில் உருவாகி பல்வேறு இழப்புகள் ஏற்பட்டிருப்பதை நாம் பார்த்திருப் போம். அப்படி ஒரு தருணம் ஏற்பட நாம் காரணமாக இருந்துவிடக் கூடாது. ஆதலால் சகிப்புத்தன்மையோடு இருக்கிறார்களே எனும் ஒரே காரணத் திற்காக வகை தொகை தெரியாமல் நாம் நடந்து கொண்டால் பின்விளைவுகள் பெரிதாக இருக்கும். சரியான பதத்தில் சோற்றினை இறக்குவது போல, சரியான தருணத்தில் அடையாளம் கண்டு சரிசெய்து விடுவது சாலச்சிறந்தது.

சகிப்பும், பொறுமையும் நம் பண்பையும், ஆளுமையையும் அதிகரிக்கும். இவை அதிகரிக்க அதிகரிக்க நாம் அனைவரையும் வசீகரிக்க ஆரம்பித்து விடுவோம். இந்தச் சகிப்புத் தன்மை, பணிபுரியும் இடத்தில் மனித வளத் துறையில் உள்ளவர்கள் மட்டுமே கடைப்பிடிக்க வேண்டிய வழிமுறை அல்ல. எல்லாருக்கும், எல்லா இடத்திலும் இது பொருந்திப் போக வேண்டிய ஒன்றாகும்.

'மாறிவிட வேண்டும், மாற்றி விட வேண்டும்' எனும் இரண்டையும் சரிவில்லாமல் சரியாகக் கையாளத் தெரிந்தால் கவலையில்லை.

*தொடர்ந்து பயணிப்போம்....*

---

## 90வது ஆண்டு நோக்கிய திருப்பயணமாக பொது நிலை பிரான்சிஸ்கன் 3ம் சபை





1934 ம் ஆண்டு புரட்டாதி மாதம் 23ம் திகதி யாழ் மரியன்னை பேராலயத்தில் ஆரம்பிக்கப்பட்டு 2024இல் 90வது அண்டில் காலடி பதிக்கும் பொது நிலை பிரான்சிஸ்கன் 3ம் சபையில் இணைந்து இல்லற வாழ்வில் தங்கள் இல்லற கடமைகளுடன். தத்தம் தகுதி மற்றும் நிலைக் கேற்ப. மகிழ்ச்சியாக.சமாதானமாக.புனித பிரான்சிஸ் அசிசியின் இருப்பிட ஆன்மீகத்தை அவரது அடிச்சுவட்டில் கிறிஸ்துவின் சீடராய் சகோதர.சகோதரிகளாக திருப்பயணியாகப் பயணிக்க அனைவரையும் அழைக்கின்றோம். என சபைத் தலைவர் சகோ.பி.ஜெறி றெனோல்ட் அழைப்பு விடுத்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில் எமது சபையில் 18 வயதிற்கு மேற்பட்ட இளையோரும் திருமணமனவர்களும் இணைய முடியும்.

யாழ் மறைக்கோட்டத்தில் ஆர்வமுள்ளவர்கள் அந்தந்த பங்குத் தந்தையூடாக எம் ஆன்மீக ஆலோசகர் அருட்தந்தை அருள்தாசன் அவர்களையும் அத்துடன் யாழ் மரியன்னை பேராலயத்தில் மாத இறுதி சனிக்கிழமைகளில் மாலை 2.30 மணிக்கு நடைபெறும் கூட்டங்களிலும் பங்கு பற்றலாம். மற்றும் முல்லைத்தீவு மறைக்கோட்டத்தில் ஆர்வமுள்ளவர்கள் அந்தந்த பங்குத் தந்தையூடாக சிலாவத்தை புனித அன்னம்மாள் ஆலயத்திலுள்ள பிரான்சிஸ்கன் கப்புச்சின் அருட்தந்தையர்களையும் கிளிநொச்சி மறைக் கோட்டத்தில் ஆர்வமுள்ளவர்கள் அந்தந்தய பங்குத் தந்தையூடாக கிளிநொச்சி மறைக் கோட்ட முதல்வரையும் தொடர்பு கொள்ள முடியும். என தெரிவித்தார்.

---

## ஆணையிடாதீர்கள்...



**'பொய்யாணை இடாதீர்.**
**ஆணையிட்டு நேர்ந்து கொண்டதை**
**ஆண்டவருக்குச் செலுத்துவீர்'**
**என்று முற்காலத்தவர்க்குக்**
**கூறப்பட்டிருப்பதைக்**
**கேள்விப்பட்டிருக்கிறீர்கள்.**
**ஆனால், நான் உங்களுக்குச் சொல்கிறேன்: ஆணையிடவே வேண்டாம்.**
**விண்ணுலகின் மேலும்**
**ஆணையிட வேண்டாம் என்கிறார் இயேசு.**

பழைய ஏற்பாட்டுக்கு முந்தைய காலந்தொட்டே ஆணையிடும் பழக்கம் சமூகத்துள் நிலவி வந்தது. ஒருவர் தன்னை நிரூபிக்க, தன் சொல்லும் செயலும் உண்மை என சாதிக்க, தான் வழிபடும் கடவுளின் பெயரால் இந்த வாக்குறுதியை மேற்கொண்டனர். ஆனால் பல்வேறு சூழல்களில் இது ஒரு கபட நாடகமாகவே அரங்கேறியது. இப்போலித்தனப் பொய்கூறலால் ஏழையரும், உண்மைகளும் ஊமையாகிப் போயினர். எனவேதான் இயேசு ஆணையிடவே வேண் டாம் என அதிகாரத்தோடு சொன்னார்.

உண்மையைப் பொய்யாகவும், பொய்யை உண்மையாகவும் புனையும் உலகில் வாழ்கிறோம். மனிதர் என்றால் மனம் கொண்டவர் என வகுக்கலாம். அந்த மனதிற்குள் எழும் உயிர்க் குரலே மனச்சான்று. மனச்சான்றை மரணிக்கச் செய்து மனம்போல ஆணையிட்டுச் சாதிக்கும் எதுவும் நம்மோடு வருவதுமில்லை, வாழ்வு தருவதுமில்லை. உண்மையே உயர்நெறி. உண்மையான மகிழ்ச்சியின் அடித்தளம் மனசாட்சியில் உள்ளது.

இறைவா! பேரிரைச்சல் நிரம்பிய இவ்வுலகில் மிக மிக மெலிதாய் உம் குரல் என் மன ஆழத்திலிருந்து வெளிப்படுவதைக் கேட்டு வாழும் கூர் செவிகளைத் தாரும்.

# அன்பின் மகிழ்வு

12



**திருமணம் என்பது அன்பில் இரு உயிர்கள் ஒன்றாக இணையும் ஓர் புனித பந்தம்**

திருமணத்தில் மணத்துணை-வர்களுடைய இணைப்பின் மேன்மையைப் பற்றி இந்த இலக்கங்களில் திருத்தந்தை சுட்டிக்காட்டுகின்றார். குறிப்பாக தொடக்கநூல் 2ம் அலகில் மணத்துணைவர்களுடைய எழிலான தொடக்க வாழ்வை யேசு சுட்டிக்காட்டியுள்ளார். தொடக்கநூல் (2:18, 20) ல் இறைவன் ஆதாமை படைத்து பின் ஆதாமிற்காகத் தான் படைத்த காட்டு விலங்குகளையும் வானத்துப் பறவைகளையும் அவனிடம் அழைத்து வந்தார். ஆனால் இவற்றின் மத்தியிலும் ஆதாம் தனிமையை உணர்ந்தான். தன்னுடைய தனிமையைப் போக்கக்கூடிய தகுந்த துணையைத் தேடுகி றான். அந்த நிலையில் இறைவன் அவனது விலா எலும்பை எடுத்து அதிலிருந்து அவனுக்கு உகந்த ஓர் துணையை ஏற்படுத்தினார். இவ்வாறு ஆதாம் ஏவாள் என்கின்ற இருவரின் சந்திப்பு அமைதியான சூழலில் நடைபெறும் உரையாடலின் சந்திப்பாகும். இங்கு வார்த்தைகளை விட அமைதி மேலோங்கியுள்ளது. உண்மையான அன்பு உள்ள இடத்தில் வார்த்தைகளை விட அமைதியே மேலோங்கி நிற்கிறது. இந்த அமைதியில் ஒருவர் மற்றவரை உற்று நோக்கி முகமுகமாகச் சந்திக்கும் தருணம் ஓர் உன்னத நிலையாகும். இதனையே சீராக் ஞானநூல் 34:24 சொல்லுகிறது: "மனிதன் ஓர் உயர்ந்த உடமையை பெற்றுள்ளான். தனக்கேற்ற துணையையும் அடைகிறான்". இதனையே (இனிமை தரும் பாடல் 2:16 6:3) இவ்வாறு குறிப்பிடுகிறது: "என் காதலர் எனக்குரியவர்: நானும் அவருக்குரியள்:.. நான் என் காதலர்க்குரியள்: என் காதலர் எனக்குரியவர்".

எனவே தான் திருமணம் என்பது மனிதரின் தனிமையைப் போக்க வாழ்நாள் முழுவதும் நிலைத்திருக்கும் மணத்துணையைத் தம்பதிகளுக்கு ஏற்படுத்துகிறது. எனவே தான் யேசுவின் வார்த்தைகளில் "கணவன் தன் மனைவியுடன் ஒன்றித்திருப்பான். இருவரும் ஒரே உடலாய் இருப்பார்". (மத் 19:5) எனவே திருமணம் என்பது தம்பதிகள் இடையே "ஒன்றித்திரு" அல்லது "பற்றுக் கொண்டு இரு" என்கின்ற வார்த்தைகளின் அடிப்படையில் ஒரு ஆழ்ந்த இணைப்பை நெருக்கத்தை ஏற்படுத்துகிறது.

எனவே திருமண இணைப்பானது பாலியல் சார்ந்த உடல் சார்ந்த பரிமாணங்களுக்கு மேலாக உள்ளத்து அளவிலும் இருவரும் ஒன்றாகி ஒரே உடலாக ஒரே உள்ளமாக மாறுகின்றனர். ஒருவரை ஒருவர் பற்றிக் கொண்டு ஒரே உடலாக ஒரே உள்ளமாக மாறி அன்பில் வாழப்பழகும் வாழ்வு தான் திருமண வாழ்வாகும். இந்த ஒன்றிப்பை அண்மையில் வெளியாகிய "இறுகப்பற்று" என்ற தமிழ் திரைப் படம் சிறப்பாக வெளிப்படுத்துகிறது. எனவே திருமண பந்தத்தில் இணைந்த இணைய இருக்கின்ற அனைவரும் பார்க்க வேண்டிய திரைப்படமாகும். இத் திரைப்படமானது திருமணத்தைப் பற்றிய ஓர் உளவியல் பார்வையில் வடிவமைக்கப்பட்ட ஒரு திரைப்படமாகும்.

சிறப்பான முறையில் மூன்று குடும்பங்களில் எழு கின்ற பல்வேறு பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் வழிகளை இத்திரைப்படம் மிக அழகாகச் சுட்டிக்காட்டுகின்றது. திருமண வாழ்வில் ஒருவரை ஒருவர் உடல் அளவில் மட்டுமல்ல உள்ளத்து அளவிலும் ஆன்மீக ரீதியிலும் பற்றி வாழ்வதே திருமண வாழ்வாகும். எனவே தான் அனைத்துத் தம்பதியினரும் திருமணத்தில் எழும் சவால்களை எதிர் கொள்ள இத் திரைப்படத்தில் இருந்து நிறைய விடயங்களைக் கற்றுக் கொள்ள முடியும். எனவே இத் திரைப்படத்தை பார்த்து திருமணத்தின் முழுப் பலனை அடைய வாழ்த்துகின்றோம்.

அருட்பணி மனுவற்பிள்ளை டேவிட்
அகவொளி குடும்ப நல மையம்

# மக்களைத் தரிசித்த மருதமடு அன்னை

(3ம் பக்கத் தொடர்ச்சி)

அன்னையை நோக்கி அழுது மன்றாடி அற்புதமான விதத்தில் நடந்த புதுமைகளும் எமது காதுகளுக்கு எட்டிய வண்ணமாக இருக்கின்றன.

தயாரிக்கப்பட்ட பங்குத்தரிசிப்பின் ஒழுங்கமைப்பில் கடல் பயணம் ஆபத்து நிறைந்தது என்று தவிர்க்கப்பட்டிருந்த நெடுந்தீவு பங்கிற்கு எப்படியும் அன்னையானவள் வரவேண்டும், எமது மக்களையும், மண்ணையும் ஆசீர்வதிக்கவேண்டும் என்று மீண்டும், மீண்டும் அம்மக்கள் கேட்டுக்கொண்டது மட்டுமல்லாமல் 1974ம் ஆண்டு வெளியிடப்பட்ட பாதுகாவலன் பத்திரிகையின் ஊடாக அன்று அன்னையானவள் தங்களைத் தரிசித்தாள் என்பதை நிரூபித்து, அதன் மூலம் அனுமதி பெற்று அன்னைக்கு கொடுத்த உன்னதமான வரவேற்பானது நெடுந்தீவு மக்களின் உயர்ந்த ஆன்மீகத்தை வெளிப்படுத்தி நின்றது.

இவ்வேளையில் மன்னார் மறைமாவட்ட குரு முதல்வர் என்ற ரீதியிலும், மருதமடு அன்னையின் யூபிலித் திருப்பயணக் குழுவிற்குப் பொறுப்பாளர் என்ற வகையிலும் இத்திருப்பயணத்திலே ஈடுபட்ட அனைவருக்கும் எனது பாராட்டுக்களையும், நன்றிகளையும் கூறிக்கொள்கின்றேன். சிறப்பாக மருதமடு அன்னையின் திருப்பயணத்திற்குப் பொறுப்பாக நியமிக்கப்பட்ட குருக்கள் மற்றும் மடுத்திருத்தல பணியாளர்களுக்கும், யாழ் மறைமாவட்ட திருப்பயணத்திற்குப் பொறுப்பாக நியமிக்கப்பட்ட யாழ் மறைமாவட்டக் குருமுதல்வர் மற்றும் அவரோடு இணைந்த குருக்கள் மற்றும் பணியாளர்களுக்கும் எனது சிறப்பான பாராட்டுக்களையும், நன்றிகளையும் தெரிவித்துக் கொள்கின்றேன். அன்னையின் திருப்பயணம் மிகவும் வெற்றிகரமாக, நடந்தேறவும், இறைமக்கள் ஆன்மீக ரீதியில் புதுப்பிக்கப்படவும் பல நாட்களை செலவளித்து அன்னையை வரவேற்க பல ஆயத்தங்களை மேற்கொண்டு "மரியன்னையோடு நம்பிக்கையின் திருப்பயணிகளாவோம்" என்னும் கருப்பொருளில் மக்களை வழிநடத்திச் சென்ற அனைத்து மன்னார், யாழ் மறைமாவட்டக் குருக்கள், துறவிகள், இறைமக்களுக்கு எமது பாராட்டுக்களையும், நன்றிகளையும், கூறிக்கொள்வதோடு மருதமடு அன்னையின் பரிந்துரையையும் வேண்டி நிற்கின்றோம்.

இவ்வருடம் ஆனி மாதம் 23ம் திகதி கொடியேற்றத்துடன் மடு அன்னையின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு ஆடித்திருவிழா ஆரம்பமாகின்றது. தினமும் காலையில் திருப்பலியும், மாலையில் நற்கருணை வழிபாடும் தமிழ், சிங்கள மொழிகளில் இடம்பெறும். ஆடி மாதம் முதலாம் திகதி மாலை வேஸ்பர் ஆராதனை இடம்பெறும். அன்று காலை 10 மணிக்கு நூற்றாண்டு யூபிலியை முன்னிட்டு விசேட முத்திரையும், யூபிலி மலரும் வெளியிடப்படும். 2ம் திகதி காலை 6.15 மணிக்கு திருநாள் திருப்பலியானது இலங்கையின் பல ஆயர்கள் புடைசூழ அதிமேதகு கருதினால் ஆண்டகை அவர்களால் நிறைவேற்றப்படும். இவ்யூபிலி பெருவிழாத் திருப்பலியில் கலந்துகொண்டு மருதமடு அன்னையின் ஆசீரைப் பெற்றுச் செல்ல உங்கள் அனைவரையும் அன்புடன் அழைத்து நிற்பதோடு மருதமடு அன்னையின் பரிந்துரை உங்கள் அனைவருக்கும் நிறைவாகக் கிடைக்க வேண்டி நிறைவு செய்கின்றேன்.

## மணமகள் தேவை

வயது: 35
சமயம்: றோமன் கத்தோலிக்கம்
தொழில்: Chief (France)
கல்வித்தகைமை: A|L
நாடு: France
வாழ்க்கை துணை பற்றிய எதிர்பார்ப்பு:
றோமன் கத்தோலிக்க பெண், வதிவுரிமையுள்ள பெண்பிள்ளை (வெளிநாடு)

வயது: 33
சமயம்: றோமன் கத்தோலிக்கம்
தொழில்: உள்ளக கணக்காய்வு உத்தியோகத்தர் (internal Audit)
கல்வித்தகைமை: விஞ்ஞானமானி பட்டப்படிப்பு (Bsc)
பிரதேச செயலகம்: பச்சிலைப்பள்ளி (பளை)
வாழ்க்கை துணை பற்றிய எதிர்பார்ப்பு: அரசாங்க உத்தியோகம்

வயது: 32
சமயம்: றோமன் கத்தோலிக்கம்
தொழில்: Own Shop ( Bike Showroom)
கல்வித்தகைமை: A|L
கிராமசேவையாளர் பிரிவு: J|203
வாழ்க்கை துணை பற்றிய எதிர்பார்ப்பு: ஆசிரியர்

வயது: 33
சமயம்: றோமன் கத்தோலிக்கம்
தொழில்: வன இலாகா உத்தியோகத்தர்
கல்வித்தகைமை: விஞ்ஞானமானி பட்டப்படிப்பு (Bsc)
பிரதேச செயலகம்: யாழ்ப்பாணம்
வாழ்க்கை துணை பற்றிய எதிர்பார்ப்பு: அரசாங்க உத்தியோகம்
நல்ல குடும்பமாக இருக்க வேண்டும்

# அகவொளி குடும்ப நலமையம் திருமண சேவை

## மணமகன் தேவை

வயது: 36
சமயம்: றோமன் கத்தோலிக்கம்
கல்வித்தகைமை: பட்டதாரி
தொழில்: சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்
பிரதேச செயலகம்: சண்டிலிப்பாய்
வாழ்க்கை துணை பற்றிய எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம் அல்லது தனியார் வேலை வெளிநாடு

வயது: 29
சமயம்: றோமன் கத்தோலிக்கம்
கல்வித்தகைமை: பட்டதாரி
பிரதேச செயலகம்: சண்டிலிப்பாய்
வாழ்க்கை துணை பற்றிய எதிர்பார்ப்பு:
அரச உத்தியோகம் அல்லது வெளிநாடு

வயது: 24
சமயம்: றோமன் கத்தோலிக்கம்
கல்வித்தகைமை: G.C.E A\L , B.Com (Following)
தொழில்: Management Service officer at Health Department
பிரதேச செயலகம்: வலி. தென்மேற்கு சண்டிலிப்பாய்
வாழ்க்கை துணை பற்றிய எதிர்பார்ப்பு:
அரச உத்தியோகம்

வயது: 27
சமயம்: றோமன் கத்தோலிக்கம்
கல்வித்தகைமை: H.N.E
தொழில்: Program Coordinator at American Corner Embassy
கிராம சேவையாளர் பிரிவு: J| 70
வாழ்க்கை துணை பற்றிய எதிர்பார்ப்பு:
அரச உத்தியோகம் அல்லது நிறுவனங்கள்

வயது: 32
சமயம்: றோமன் கத்தோலிக்கம்
தொழில்: ஆசிரியர்
கல்வித்தகைமை: G.C.E (A\L) , HNDE (E)
பிரதேச செயலகம்: சண்டிலிப்பாய்
வாழ்க்கை துணை பற்றிய எதிர்பார்ப்பு:
நிரந்தர அரச உத்தியோகம்

வயது: 33
சமயம்: றோமன் கத்தோலிக்கம்
கல்வித்தகைமை: பட்டதாரி
பிரதேச செயலகம்: ஊர்காவற்றுதுறை
வாழ்க்கை துணை பற்றிய எதிர்பார்ப்பு:
அரச உத்தியோகம் அல்லது தனியார் வேலை

## மணமகள் தேவை

வயது: 42
சமயம்: றோமன் கத்தோலிக்கம்
தொழில்: பலசரக்கு பான்சி கடை
கல்வித்தகைமை: G.C.E (A\L)
பிரதேச செயலகம்: கோப்பாய்
வாழ்க்கை துணை பற்றிய எதிர்பார்ப்பு:
படித்த பிள்ளை

வயது: 43
சமயம்: றோமன் கத்தோலிக்கம்
தொழில்: அரச உத்தியோகம் (வனவிலங்கு திணைக்களம் முறுகண்டி)
கல்வித்தகைமை: O|L
பிரதேச செயலகம்: கரைச்சி
வாழ்க்கை துணை பற்றிய எதிர்பார்ப்பு:
கத்தோலிக்க பெண்

வயது: 26
சமயம்: றோமன் கத்தோலிக்கம்
தொழில்: சுத்திகரிப்பு மற்றும் கட்டட பராமரிப்பு மேற்பார்வையாளர்
கல்வித்தகைமை: (A\L) NVQ
பிரதேச செயலகர் பிரிவு: யாழ்ப்பாணம் J|89
வாழ்க்கை துணை பற்றிய எதிர்பார்ப்பு:
அரசாங்க வேலை, தனியார் வேலை

**இவை பற்றிய மேலதிக விபரங்களைப் பெற கீழ் உள்ள முகவரியில் தொடர்பு கொள்ளவும்அகவொளி குடும்ப நல மையம் புனித பத்திரிசியார் வீதி யாழ்ப்பாணம் தொலைபேசி இலக்கங்கள் 077- 942 2970, 077 - 904 7651, 021- 222 2856**

## இயேசுவின் திரு இருதய ...

(2ம் பக்கத் தொடர்ச்சி)

ஏன் அவ்வளவுக்குப் போக வேண்டும். "அப்ப, இரச வடிவில் ஆண்டவர் இருக்கிறார். அவர் அன்பைப் பார்த்தாயா?" என்று அப்ப இரசத்தைக் காண்பித்தால்கூட கிறிஸ்து வின் அன்பு இன்றைய மனிதரை அவ்வளவாக ஈர்க்காது. ஏனென்- றால் இயேசுதான் திருஇருதயப் படமும் சுரூபமும் அவரது அன்பின் அடையாளங்களே.


அப்பம், இரசம் வடிவில் இறைமகனே உறைந்தாலும் நம் கண்களுக்கு அவை அடை யாளங்களே. அடையாளங்களையே அவ்வளவு எளிதில் நம்பாத மனிதனிடம் இவற்றைக் காண்பித்து அவரது அன்பின் ஆழ அகலத்தைக் கண்டுணரச் சொன்னால் அவனால் முடியாது. ஆகவே, கிறிஸ்து வின் அன்பைக் காண்பிக்க ஒரு- வரைக் கோவிலுக்குக் கூட்டிக் கொண்டு வருவதற்குப் பதிலாகப் பாமர ஏழைகள் வாழும் குடிலுக் குக் கூட்டிக் கொண்டுபோய், அங்கே கிறிஸ் தவர் ஒருவரது அன்புப் பணி யாலே, தியாகப் பணியாலே, சமூக சேவையாலே வற்றிய வயிறு, நிரம்பி வாடிய மனங்கள் தேறி மகிழ்ந்தி ருப்பதைக் காண்பித்தால் கிறிஸ்து வின் அன்பு எப்படிப்பட்டது என்பதை இக்க- ால மனிதர் உடனே ஏற்றுக்கொள் வார். ஆகவே அடையாளங்களைக் காண்பித்துக் கொண்டிராது அந்த கொண்டிராது அந்த அடையாளங்கள் குறித்துக் காட்டும் கிறிஸ்துவின் அன்பை கிறிஸ்தவர்களாகிய நாம் ஏழைகளுக்கும், இல்லாத எளியவர்க- ளுக்கும் அயலாருக்கும் செய்கிற தியா- கப் பணிகள் மூலமாக உலகுக்குக் காட்டவேண்டும். அத்தகைய சமூக சேவையில்தான், பிறர்நலத் தொண்டி- லேதான் கிறிஸ்துவின் அன்பு எப்படிப் பட்டது என்று இக்கால மனிதனுக்கு உறுதியாகக் காண்பிக்க முடியும். எனவே தான் ஏழையின் சிரிப்பிலே இறைவனைக் காண்கிறேன் என்று பல்லவியோடு தொடங்குபவர்களின் பாட்டு இன்று திக்கெட்டும் வெற்றி நடைபோடுகிறது.

இவ்வாறு பிறர்நலப் பணிகள் வாயிலாகவே சிறந்த முறையில் கடவுளின் அன்பை மனிதருக்கு மனிதர் உணர்த்த முடியும் என்பதற்குச் சான்றாகவும், எடுத்துக்காட்டாகவும் கடவுள் விளங்கினார். இதனைப் பழைய ஏற்பாட்டிலும், புதிய ஏற்பாட்டிலும் காண்கிே- றாம். பழைய ஏற்பாட்டுக் காலத்தில் கடவுள் தன் மக்களோடு, இறைவாக்கினர்களோடு செய்து கொண்ட உடன்படிக்கை மூலமாகவும் புரிந்த இரக்கம் நிறைந்த தியாகச் செயல்கள் மூலமாகவும் தனது அன்பை வெளிப்படுத்தினார்.

அன்புப் பணிக்குத் தன்னை ஆளாக்க விரும்பும் கிறிஸ்தவரின் உள்ளம் கிறிஸ்து வோடு அன்பிலும், பக்தியிலும் எப்போதும் இணைந்திருக்கப் பழகுவதாக.


## விண்ணக வாழ்வின் ஆறாம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில்
21 . 03 . 1935



விண்ணில்
04 . 06 . 2018

ஆண்டு ஆறு ஓடி மறைந்தாலும்
எம் நெஞ்சில் நிலைத்திருக்கும் பாசதீபங்கள்
உங்கள் நினைவுகள் என்றும் அழியாது
அன்புக்கு இருப்பிடமாய் வாழ்ந்தவர்
ஆசிரியப் பணிக்கு அர்பணித்திட்டவர்
இல்லற வாழ்வில் இலக்கியமாய் இருந்தவர்
ஈகை செய்து இன்புற்றிருந்தவர்
எளிமை வாழ்வதனை எமக்குணர்த்தி
ஏணிப்படியாய் நின்றெம்மை உயர்த்தியவர்
ஐக்கியமாய் வாழ்வதை வலியுறுத்தி
ஒற்றுமை ஒப்புரவு குடும்பத்தில் வேண்டுமென்றார்
ஓயாமல் அதற்கு உழைத்த அன்பு அப்பாவே,
உம் நினைவுகள் என்றும் எம்மை விட்டு நீங்கா.

"மனோ சாந்தி"
பிரிவுத் துயர் தாங்கா
குடும்பத்தினர்

அமரர்
**இசைக்கலைஞன் வென்டக்கோன் பொன்ராசா**
**அன்ரன் கிளாறன்ஸ் ஆனந்தராஜா**
(ஓய்வு பெற்ற ஆசிரியர் ஹென்றியரசர் கல்லூரி-இளவாலை)

407 கொறவப் பொத்தானைவீதி,
இறம்பைக்குளம், வவுனியா 024 2221974

AD-29

## விண்ணக வாழ்வின் 2ம் ஆண்டு நினைவு

மண்ணில்
10 . 04 . 1948



விண்ணில்
10 . 06 . 2022

**அருட்பணி கலாநிதி அன்ரன் மத்தாயஸ்**

பணிக்குருத்துவத்தில் பன்னெடுங்காலம்
பல்துறைப் பணியாற்றிய பன்முக ஆளுமையே!
இறைபணியும் கல்விப் பணியும் இரு கண்ணென இலங்கினீரே!
யாழ் பல்கலைக்கழகமதின் கிறிஸ்தவ நாகரீகத்துறை தலைவராக
ஆற்றிய பணிகள் போற்றுதற்குரியன பல்கலை மாணவர் தம் ஆன்மீகம்
ஆலவிருட்சமென விழுதெறிந்து தழைத்தோங்க
நல்லாயன் ஆன்மீக நிலையமதை
நலமே நிறுவிய நற்பணியும் நினதன்றோ
ஏழைகள் மீதான உம் பரிவிரக்கம்
மலைமீது அருவியாகப் பெருக்கெடுத்துப் பாய்ந்ததுவே
பரலோக பிதா அருள்கூர பாருலககோர் களிகூர
பலிப்பொருள் தான் குருத்துவம் என
மண்ணரசில் கோதுமை மணியென உம்மை உடைத்தீர்
ஆதலால் விண்ணரசு உமதன்றோ...

பிரிவால் துயருறும்
அண்ணன், அக்கா,
நிர்மலா, தர்ஷினி மற்றும்
குடும்பத்தினர்

## நீங்கா நினைவில் 25து ஆண்டுகள்

பிறப்பு
05 . 08 . 1930



இறப்பு
08 . 06 . 1999

அமரர்
**பெஞ்சமின் குமாரகுலசிங்கம்**

"ஆண்டவர் என் ஆயர் எனக்கேதும் குறையில்லை
பசும்புல் வெளிமீது என்னை அவர் இளைப்பாறச் செய்வார்"
(தி.பா.23:1,2)

ஆலமரம்போல் எமக்கு நிழல் தந்த அன்பு தந்தையே! வித்துக்களாய்
மண்ணில் விழ்ந்து விருட்சமாய் நிழல் பரப்பி
எம் நிழலில் உங்களை வாழ வைக்கும் வேளையில்
எம்மை விட்டு பிரிந்தீர்களே!

229, கடற்கரை வீதி, நாவாந்துறை
யாழ்ப்பாணம்.

பிரிவால் துயருறும் குடும்பத்தினர்

AD-37

## விண்ணக வாழ்வில் 4ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தாய் மடியில்
16 . 12 . 1924



இறை அடியில்
10 . 06 . 2020

அமரர்
**திரு. இறமேந்து தேவசகாயம்**
(ஓய்வுநிலை அதிபர்)

"ஆண்டவரின் இல்லத்தில் என் வாழ்நாள் எல்லாம்
நான் குடியிருக்க வேண்டும்" [தி.பா.27:4]

அன்பான இறைவா!
இவ் உலகத்திலிருந்து உம்மிடம் அழைத்துக்கொண்ட உமது அடியான் அமரர்
இறமேந்து தேவசகாயம் அவர்களை உமது நித்திய வான்வீட்டில்
சேர்த்தருள வேண்டுமென்று இரந்து மன்றாடுகின்றோம். ஆமென்

3ம் வட்டாரம்,
மண்டைதீவு.

இவரது பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்

## 31ம் நாள் நினைவு



அமரர்
**மரியநாயகம் செபமாலை**
(அம்மா)

பிறப்பு
29. 06. 1943

இறப்பு
06. 05. 2024

AD-30

# பண்டத்தரிப்பில் இளையோருக்குக் கருத்தமர்வு




சட்டத்திற்கும் மனித உரிமைக்குமான நிலையத்தின் ஏற்பாட்டில் இளவாலை மறைக்கோட்ட இளையோர்களுக்காக முன்னெடுக்கப்பட்ட பால் நிலை சமத்துவம் தொடர்பான கருத்தமர்வு கடந்த 19ஆம் திகதி இளவாலை மறைக்கோட்ட இளையோர் ஒன்றிய இயக்குநர் அருட்பணி ம.பத்திநாதர் அடிகளாரின் தலைமையில் அவரது ஆசீச் செய்தியுடனும், ஆரம்ப உரையுடனும் நிகழ்வுகள் ஆரம்பமாகின.

சட்டத்தரணி திருமதி கார்த்திகா, திரு.சுதாகரன், திருமதி. நியாளா ஆகியோர் வளவாளர்களாகக் கலந்து சிறப்பித்தமை குறிப்பிடத்தக்கது. மேலும் மறைமாவட்ட இளையோர் ஒன்றிய இயக்குநர் அருட்பணி. பா. பிறாயன் அடிகளாரும் கலந்து கொண்டார்.

இந்நிகழ்வில் பால்நிலை சமத்துவம், அரசியல் சமூகம் மற்றும் பொருளாதார ரீதியில் பெண்கள் மற்றும் ஆண்களுக்கான சமத்துவம் போன்ற விடயங்கள் ஆராயப்பட்டன. இளவாலை மறைக்கோட்டத்தைச் சேர்ந்த 80 இளைஞர், யுவதிகள் கலந்துகொண்டனர். இளவாலை மறைக்கோட்ட இளையோர் ஒன்றியத் தலைவர் செல்வன் நிறாஜ் அவர்களின் நன்றியுரையுடன் மதிய உணவோடு நிகழ்வகள் நிறைவடைந்தன.

### அச்சுவேலிப் பங்கின் நவக்கிரி

# புனித நீற்றம்மாள் ஆலய வருடாந்தத் திருவிழா



அச்சுவேலிப் பங்கின் நவக்கிரி புனித நீற்றம்மாள் ஆலய வருடாந்தத் திருவிழா பங்குத்தந்தை அருட்தந்தை மைக்கல் சவுந்தரநாயகம் அவர்களின் ஒழுங்குபடுத்தலில் கடந்த 22ஆம் திகதி புதன்கிழமை நடைபெற்றது.

19ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை கொடியேற்றத்துடன் ஆயத்த நாள் வழிபாடுகள் ஆரம்பமாகி 21 ஆம் திகதி நற்கருணை விழா இடம்பெற்றது. திருவிழாத் திருப்பலியை பருத்தித்துறை மறைக்கோட்ட முதல்வர் அருட்தந்தை பெனற் அவர்களும் நற்கருணை விழாத் திருப்பலியை செபமாலைதாசர் சபை அருட்தந்தை அலன் அவர்களும் தலைமைதாங்கி ஒப்புக் கொடுத்தனர். 20ஆம் திகதி திங்கட்கிழமை ஆலயப் பீடத்திற்கென அமைக்கப்பட்ட புதிய பலிப்பீடமும் வாசக மேடையும் பங்குத்தந்தை அவர்களினால் ஆசீர்வதிக்கப்பட்டுத் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

### பண்டத்தரிப்பு பங்கில்

# மறையாசிரியர் பாட ஆயத்த பயிற்சி அமர்வு



பண்டத்தரிப்புப் பங்கில் முன்னெடுக்கப்பட்ட மறையாசிரியர்களுக்கான கருத்தமர்வு கடந்த 24ஆம் திகதி வெள்ளிக்கிழமை பண்டத்தரிப்பு புனித பற்றிமா அன்னை மறைப்பாடசாலையில் நடைபெற்றது. பங்குத்தந்தை அருட்தந்தை ம. பத்திநாதர் அடிகளாரின் ஒழுங்குபடுத்தலில் இடம்பெற்ற இக்கருத்தமர்வில் கிறிஸ்தவ பாட ஆசிரிய ஆலோசகர் திருமதி. விக்டோரியா அவர்கள் வளவாளராகக் கலந்து கருத்துரைகள், குழுச் செயற்பாடுகள், விளையாட்டுக்கள் ஊடாக மறையாசிரியர்களை நெறிப்படுத்தினார். இந்நிகழ்வில் 20 வரையான மறையாசிரியர்கள் பங்குபற்றி பயனடைந்தனர்.

### மணற்காடு பங்கில்

# நற்கருணைக் கண்காட்சி



மணற்காட்டுப் பங்கில் இவ்வருடம் முதல் நன்மை பெறவுள்ள சிறார்களால் முன்னெடுக்கப்பட்ட நற்கருணைக் கண்காட்சி கடந்த 19ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

பங்குத்தந்தை அருட்தந்தை ஜோன் குரூஸ் அவர்களின் ஒழுங்குபடுத்தலில் மணற்காடு புனித அந்தோனியார் ஆலயத்தில் இடம்பெற்ற இக்கண்காட்சியில் மாணவர்கள் ஆர்வத்துடன் பங்குபற்றியிருந்தனர்.

### சுன்னாகம் பங்கில்

# புனித இசிதோர் ஆலய வருடாந்தத் திருவிழா





சுன்னாகம் பங்கின் ஏழாலை புனித இசிதோர் ஆலய வருடாந்தத் திருவிழா அருட்தந்தை றெனால்ட் அவர்களின் ஒழுங்குபடுத்தலில் கடந்த 19ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. கடந்த 10ஆம் திகதி வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆயத்தநாள் வழிபாடுகள் ஆரம்பமாகி 18ஆம் திகதி நற்கருணைவிழா இடம்பெற்றது. திருவிழாத் திருப்பலியை யாழ். மறைமாவட்ட நிதி முகாமையாளர் அருட்தந்தை நேசநாயகம் அவர்களும் நற்கருணைவிழாத் திருப்பலியை இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி அதிபர் அருட்தந்தை மைக் மயூரன் அவர்களும் தலைமைதாங்கி ஒப்புக் கொடுத்தனர். திருப்பலி நிறைவில் இந்நாளை சிறப்பிக்கும் முகமாக ஆலயத்திற்கான "புனித இசிதோர் ஆலயம் ஏழாலை" என்னும் பெயரில் புதிய இணையத்தள அங்குரார்ப்பண நிகழ்வும் இடம்பெற்றது.

# திருமறைக்கலாமன்றத்தின் "கலை நிலா"



யாழ். திருமறைக்கலாமன்ற கலைத்தூது அழகியல் கல்லூரியினால் முன்னெடுக்கப்பட்ட கலைநிலா அரங்கு கடந்த 23ஆம் திகதி வியாழக்கிழமை யாழ். பிரதான வீதியில் அமைந்துள்ள கலைத்தூது கலையகத்தில் நடைபெற்றது. கல்லூரி அதிபர் திருமதி. அஞ்சலா அல்போன்சஸ் அவர்களின் ஒழுங்குபடுத்தலில் நடைபெற்ற இந்நிகழ்வில் அழகியல் கல்லூரியில் பயிலும் மாணவர்களின் ஆற்றல்களை வெளிப்படுத்தும் கலைநிகழ்வுகள் இடம்பெற்றன.

யாழ். பிரதேச செயலக கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் திரு. பஸ் ரியாம் பிள்ளை ஜோண்சன் அவர்கள் சிறப்பு விருந்தினராகக் கலந்து சிறப்பித்த இந்நிகழ்வில் அருட்சகோதரிகள், மாணவர்களின் பெற்றோர்கள், மன்ற நிர்வாக உறுப்பினர்களெனப் பலரும் கலந்துகொண்டனர்.

### நாரந்தனைப் பங்கில்

# தூய ஆவியார் பெருவிழா



தூய ஆவியார் பெருவிழாவை முன்னிட்டு நாரந்தனை பங்கில் முன்னெடுக்கப்பட்ட திருவிழிப்பு ஆராதனை புனித பேதுரு பவுல் ஆலயத்தில் நடைபெற்றது. பங்குத்தந்தை அருட்தந்தை அஜந்தன் அவர்களின் ஒழுங்குபடுத்தலில் 18ஆம் திகதி சனிக்கிழமை மாலை ஆரம்பமாகி ஞாயிற்றுக்கிழமை அதிகாலை வரை இடம்பெற்ற இத்திருவிழிப்பு ஆராதனையில் 600ற்கும் மேற்பட்ட பங்குமக்கள் பக்தியோடு கலந்து செபித்தார்கள்.

# திருமணமுன்னாயத்த வகுப்புக்கள்



யாழ். அகவொளி குடும்ப நல மையத்தால் முன்னெடுக்கப்பட்டு வரும் திருமண முன்னாயத்த வகுப்புக்கள் கடந்த 18ஆம், 19ஆம் திகதிகளில் கிளிநொச்சி புனித திரேசாள் ஆலய மண்டபத்தில் நடைபெற்றன.

கிளிநொச்சிப் பங்குத்தந்தை அருட்தந்தை சில்வெஸ்ரர்தாஸ் அவர்களின் ஒழுங்குபடுத்தலில் அகவொளி இயக்குநர் அருட்தந்தை டேவிட் அவர்களின் தலைமையில் இடம்பெற்ற இத்திருமண ஆயத்த வகுப்புக்களில் கிளிநொச்சி மற் றும் முல்லைத்தீவு மறைக் கோட்டங்களை சேர்ந்த பலர் பங்குபற்றிப் பயனடைந்தனர்.



# புத்த துறவிகளைச் சந்தித்த திருத்தந்தை

தாய்லாந்தின் மிக முக்கியமான பௌத்த ஆலயங்களில் ஒன்றான பாங்காக்கின் வாட் ஃபிரா செதுஃபோன் கோவிலில் (வாட் போ என்றும் அழைக்கப்படுகிறது) புத்த துறவிகள் அடங்கிய தூதுக்குழுவை திருத்தந்தை பிரான்சிஸ் வத்திக்கானில் 27.05.2024 அன்று சந்தித்தார்.

இப்பத்திரிகை புனித வளன் கத்தோலிக்க அச்சக முகாமையாளரால் இல. 360, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2024ம் ஆண்டு ஜூன் மாதம் 02ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.